04TH OCTOBER 2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 89 | பக்கங்கள் - 15 | editor.uthayam@gmail.com

## இஸ்ரேலின் இடைமறிப்புகள் சட்ட விரோத கடத்தல்

ஐ.நா.அறிக்கையாளர் அல்பானீஸ் கண்டனம்!

மனிதாபிமான உதவிகளை காஸா மக்களுக்கு எடுத்து வந்த ஆர்வலர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஐ.நா.அறிக்கையாளர் பிரானசெஸ்கா அல்பானீஸ் கண்டனம் தெரிவித்துள்ளார். இந்த

05ம் பக்கம்பார்க்க...

# மனிதாபிமான கப்பல்கள் தடுத்து நிறுத்தம், சர்வதேச மட்டத்தில் கண்டனங்கள்

- 40 நாடுகளைச் சேர்ந்த 500 ஆர்வலர்கள் கைது.
- கைதாகியோருள் அதிகமானோர் உண்ணாவிரதம் எந்த முற்றுகையையும் தடுத்து நிறுத்துவோம்; இஸ்ரேல் எச்சரிக்கை.
- தொடர்ந்தும் மௌனம் காக்கும் ஐ.நா.சபை.

(எம்.ஐ.அப்துல் நஸார்)

44 பேர் கொண்ட குளோபல் சுமுத் புளொடில்லாவுடன் இணைந்த அனைத்து கப்பல்களையும் இஸ்ரேலிய கடற்படை தடுத்து நிறுத்தியுள்ளது.


போரினால் பாதிக்கப்பட்ட காஸா மீதான முற்றுகையை உடைக்க

02ம் பக்கம்பார்க்க...

## டிரம்பின் சில முன்மொழிவுகளுக்கு ஹமாஸ் அமைப்பு ஒப்புதல்

குண்டு வீச்சை நிறுத்த டிரம்ப் வேண்டுகோள்

முழு ஒத்துழைப்புடன் செயற்படுவோம்; இஸ்ரேல் அறிவிப்பு!



ஜனாதிபதி டிரம்பின் முன்மொழிவுக்கு பதிலளிக்கும்

03ம் பக்கம்பார்க்க...

## ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட ரன்தோனி புத்தகம்



டாக்டர் ஷாபி ஷிஹாப்தீன் அவர்களின் மகள் தொடர்பில் மூத்த பத்திரிக்கையாளர் சுரங்க சேனாநாயக்க எழுதிய “ரன் தோனி” என்ற நூல் கடந்த 30.09.2025 அன்று கொழும்பு சர்வதேச புத்தக கண்காட்சியில்

02ம் பக்கம்பார்க்க...

## டிரம்பின் அமைதி முயற்சிக்கு இந்தியா - பாகிஸ்தான் வரவேற்பு

காசாவில் மீதமுள்ள அனைத்து பணயக்கைதிகளையும் விடுவிப்பது உட்பட, தனது அமைதித் திட்டத்தின் சில கூறுகளை

02ம் பக்கம்பார்க்க...

## குருக்கள் மடம் மனிதப் புதை குழி அகழ்வுக்கு முழுமையான நிதி ஒதுக்கீடு!



நீதியமைச்சர் தகவல்

வடக்கு, கிழக்கு பகுதிகளில் மனிதப்

02ம் பக்கம்பார்க்க...

## பாலுணர்வு சட்டங்களை அரசாங்கம் கொண்டு வரவில்லை

அமைச்சர் பிமல் தெரிவிப்பு



இனவாதமற்ற அரசாங்கமாகவும், பௌத்த மதம் உள்ளிட்ட அனைத்து மதங்களின் மதிப்புகளை மதிக்கும் ஒரு அரசாங்கமாகவும் தற்போதைய அரசு செயல்படுவதாகவும், உயிரியல் காரணங்களால் வெவ்வேறு பாலியல் நாட்டமுடைய மக்கள் நாட்டில்

02ம் பக்கம்பார்க்க...

## மோடியைச் சந்திக்க வரும் ஆப்கன் தலைவர் அமீர்கான்

ஆப்கானிஸ்தான் தாலிபான் அரசின் வெளியுறவு அமைச்சர் அமீர்கான் முத்தகி வரும் 9ம் தேதி இந்தியா வருகை தலிபான்கள் ஆட்சிக்கு வந்த பிறகு முதல் முறையாக ஆப்கான் வெளியுறவு அமைச்சர் இந்தியா வருகிறார்.

02ம் பக்கம்பார்க்க...

## சர்வதேச புத்தக கண்காட்சியில் தமிழ் மொழிக்கு பாரபட்சம்

தமிழ் புத்தக விற்பனையாளர்ள்கள் சங்கம் குற்றச்சாட்டு

(அஷ்ரப் ஏ சமட் )

கொழும்பில் தற்போது நடைபெற்றுவரும் சர்வதேச புத்தக கண்காட்சியில் தமிழ் மொழிக்கு உரிய இடம்

02ம் பக்கம்பார்க்க...

## ஐ.நா.வின் தடைகளுக்கெதிராக இலங்கையின் ஆதரவைக் கோரும் ஈரான்





ஈரான் இஸ்லாமிய குடியரசுக்கெதிராக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியுள்ள பொருளாதார மற்றும் இராணுவ தடைகள் தொடர்பாக ஈரான் வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அரகாச்சி

02ம் பக்கம்பார்க்க...

## காஸா மக்களுக்கு ஆதரவாக பல நாடுகளில் போராட்டங்கள்

இஸ்ரேலின் மூர்க்கதனமான தாகாகுதல்களினால் பாதிக்கப்பட்டுள்ள காஸா மக்களை ஆதரித்து உலகின் பல்வேறு நாடுகளில் பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.இப் போராட்டங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்று காஸா மக்களுக்கான தமது ஆதரவை வெளிக்காட்டி வருகின்றனர்.

காஸா பகுதிக்கு உதவிகளை ஏற்றிச் சென்ற கப்பல்களின் ஒரு குழுவை

05ம் பக்கம்பார்க்க...

## குர்ஆன் மொழிபெயர்ப்பு பிரதிகளை வாங்குவதில் மக்கள் ஆர்வம்!

கொழும்பு சர்வதேச புத்தக கண்காட்சியில் அல்குர்ஆன் மொழிபெயர்ப்பு பிரதிகளை வாங்குவதில் மக்கள் பெரும் ஆர்வம் காட்டியுள்ளனர்.

இங்கு நிறுவப்பட்டிருந்த இஸ்லாமிக் புக் ஹவுஸின் காட்சியறைக்கு வருகை தந்த மாற்று மதத்தவர்கள் அல்குர்ஆனின் சிங்கள, ஆங்கில மொழிபெயர்ப்பு பிரதிகளை

02ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில் வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/- ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## மனிதாபிமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயன்ற, மனிதாபிமான புளொடில்லா கப்பலை இஸ்ரேலிய இராணுவம் முழுமையாக முடக்கியுள்ளதோடு டசின் கணக்கான கப்பல்களில் இருந்து நூற்றுக்கணக்கான ஆர்வலர்களைக் கைது செய்துள்ளது.

வெள்ளிக்கிழமை காலை கடைசி கப்பலில் இஸ்ரேலிய படைகள் வலுக்கட்டாயமாக நுழைந்து கைப்பற்றப்பட்டதை நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்ட வீடியோ காட்டுகிறது. போலந்து கொடி ஏந்திய மரினெட் கப்பல் ஆறு பேர் கொண்ட தன்னார்வக் குழுவைக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது, இது 44 பேர் கொண்ட குளோபல் சுமுத் புளொடில்லாவுடன இணைந்திருந்த கடைசி படகு ஆகும் -

காஸா முற்றுகையை உடைப்பதற்கான சர்வதேச குழுவின் அறிக்கையொன்றில் இஸ்ரேலிய படைகளால் கைது செய்யப்பட்ட பல கைதிகள் "அவர்கள் கைது செய்யப்பட்ட தருணத்திலிருந்து காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்" என அறிவித்துள்ளது.

வியாழக்கிழமையன்று, புளொட்டில்லா அமைப்பாளர்களுடன் வீடியோ அழைப்பு மூலம் பேசிய அவுஸ்திரேலிய மாலுமி, தன்னை கேமரூன் என்று மட்டுமே அடையாளப்படுத்திக் கொண்டார், படகில் ஆரம்பத்தில் இயந்திரக் கோளாறுகள் இருந்ததாகவும், எனவே பிரதான குழுவை விட பின்தங்கிப் பணித்துக்கொண்டிருப்பதாகவும் விளக்கினார். கப்பல் தற்போது காஸாவை நோக்கி சென்றுகொண்டிருப்பதாகவும் கேமரூன் மேலும் கூறினார்.

"எங்களிடம் மிகவும் பலமான துருக்கியர்கள் குழு ஒன்றுஉள்ளது... ஓமானைச் சேர்ந்த ஒரு பெண்மணியும் நானும் எங்கள் கப்பலில் இருக்கிறோம், நாங்கள் அந்த திசையில் தொடர்ந்து பயணிக்கப் போகிறோம்," எனவும் அவர் தெரிவித்தார்.

காஸாவின் பிராந்திய கடற்பரப்பிலிருந்து இருந்து சுமார் 43 கடல் மைல்கள் (சுமார் 80 கிமீ) தொலைவில் கப்பல் நிலைகொண்டிருப்பதை ஒரு நேரடி புவி கண்காணிப்பு கருவி காட்டுகிறது.

"செயற்பாட்டிலுள்ள உள்ள போர் வலயத்திற்குள் நுழைந்து முற்றுகையை மீறுவதற்கான எந்த முயற்சியும் தடுக்கப்படும்" என இஸ்ரேலின் வெளிவிவகார அமைச்ச முன்னதாக பயணித்துக்கொண்டிருக்கும் கப்பல்களை எச்சரித்திருந்தது.

புதன்கிழமை முதல், இஸ்ரேலின் கடற்படை காஸாவிற்கு மனிதாபிமான பொருட்களை ஏற்றிச் செல்லும் டசின் கணக்கான படகுகளை நிறுத்தி, 40 க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த சுமார் 500 ஆர்வலர்களை கைது செய்துள்ளது.

தன்னார்வலர்கள் "சட்டபூர்வமான கடற்படை முற்றுகையை" மீற முயற்சிப்பதாக இஸ்ரேல் முன்பு குற்றம் சாட்டியது - இது சர்வதேச சட்டத்திற்கு எதிரானது - மேலும் அவர்களைத் தடுக்க தேவையான அனைத்தையும் இஸ்ரேல் செய்யும் எனவும் தெரிவித்திருந்தது.

இஸ்ரேலின் கடற்படை ஒவ்வொரு படகையும் தடுத்து நிறுத்தி, அதன் பணியாளர்களை இஸ்ரேலுக்கு மாற்றுவதற்கு முன்பு தடுத்து வைத்துள்ளது, அங்கிருந்து அவர்கள் நாடு கடத்தப்படுவார்கள். ஆர்வலர் கிரேட்டா துன்பெர்க், முன்னாள் பார்சிலோனா நகர முதல்வர் அடா கோலாவ் மற்றும் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் ரிமா ஹாசன் உள்ளிட்ட பல உயர்மட்ட நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் அடங்குவர்.

பலஸ்தீனப் பகுதிக்கு பொருட்களை வழங்க இதுவரை முடியாதிருக்கின்ற மிகப்பெரிய கடல்வழி உதவிப் பயணமாகும், இந்த படகுப் படை உலகளாவிய கவனத்தை ஈர்த்துள்ளது, மேலும் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டதற்கு உலகளாவிய கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது மற்றும் உலகளவில் எதிர்ப்புகளும் எழுந்துள்ளன.

உலகளவில் 16.5 மில்லியனுக்கும் அதிகமான போக்குவரத்துத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சர்வதேச போக்குவரத்துத் தொழிலாளர் கூட்டமைப்பின் (ஐவுகு) பொதுச் செயலாளர் ஸ்டீபன் காட்டன், "சர்வதேச கடற்பரப்பில் வன்முறையற்ற, மனிதாபிமானக் கப்பல்களைத் தாக்குவது அல்லது கைப்பற்றுவது" சர்வதேச சட்டத்தின் கீழ் சட்டவிரோதமானது என அல் ஜஸீராவிடம் தெரிவித்தார்.

"சர்வதேச சட்டத்தை எப்போது மதிக்க வேண்டும் என்பதை நாடுகள் தேர்ந்தெடுத்துத் தேர்வு செய்ய முடியாது. கடல்பரப்பை ஒரு போர்க்களமாக மாற்றக்கூடாது," எனவும் அவர் தெரிவித்தார்.

உலகத் தலைவர்களும் சட்டவிரோதக் கைப்பற்றல்களைக் கண்டித்துள்ளனர், கொலம்பிய ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ உட்பட, இஸ்ரேலிய தூதர்களை வெளியேற்றுவதாகவும், இஸ்ரேலின் நடவடிக்கைகளின் காரணமாக கொலம்பியாவின் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதாகவும் தனது அரசாங்கம் சார்பில் அறிவித்தார்.

ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, ஸ்பெயின், கிரீஸ் மற்றும் அயர்லாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளும் "இஸ்ரேலால் கைது செய்யப்பட்டுள்ள குழு உறுப்பினர்களின் உரிமைகளை மதிக்க வேண்டும்"என அழைப்பு விடுத்துள்ளன.

இஸ்ரேலின் நடவடிக்கைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை இன்னும் கருத்து தெரிவிக்கவில்லை, ஆனால் பலஸ்தீனத்திற்கான ஐ.நா. வின் விசேட அறிக்கையாளர் பிரான்செஸ்கா அல்பானீஸ், இடைமறிப்புகளை "சட்டவிரோதக் கடத்தல்" என்று விவரித்துள்ளார்.

"இஸ்ரேலின் கொலைக்களங்களில் சிக்கியுள்ள காஸா மக்களுடன் என் மன எண்ணங்கள் உள்ளன" என்று அல்பானீஸ் தனது எக்ஸ் தளத்தில் பதிவு செய்துள்ளார்.

## சர்வஜன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாங்குவதில் பெரும் ஆர்வம் காட்டியதாக புக் ஹவுஸின் பேச்சாளரொருவர் உதயத்துக்கு தெரிவித்தார்.

## அனைத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதால், அவர்கள் ஒருபோதும் அநீதிக்கு உள்ளாக்கப்படக் கூடாது எனவும், இது தொடர்பாக எந்தவொரு சட்டத்தையும் அரசு கொண்டுவரவில்லை எனவும் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அமைச்சரவையின் ஒருமித்த முடிவின் அடிப்படையில், மக்களின் வாழ்க்கைக்கு தாக்கம் செலுத்தும் அமைச்சுகளை மாவட்ட மட்டத்தில் இணைக்கும் வகையில் ஒருங்கிணைப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் ஒருங்கிணைப்புக் குழு, அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் தலைமையில், கடந்த 1ஆம் தேதி அனுராதபுரம் மாவட்ட செயலகத்தில் நிறுவப்பட்டது.இந்த ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திற்கு ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இருப்பினும், கூட்டத்தின் பின்னர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

அமைச்சரின் முக்கிய கருத்துக்கள்:

மனித உரிமைகள் பாதுகாப்பு: குழந்தைகளுக்கு வன்முறையின்றி ஆலோசனைகள் வழங்கப்படுவதுடன், மனித உரிமைகளைப் பாதுகாக்க அரசு செயல்படுகிறது. புதிய சட்டங்களைக் கொண்டுவருவதாகக் கூறி விமர்சனங்கள் முன்வைக்கப்படுவது, நாட்டில் போதைப்பொருள் பரவலுக்கு உதவியவர்களால் செய்யப்படுவதாக அமைச்சர் குற்றஞ்சாட்டினார்.

பாதை அபிவிருத்தி: அனுராதபுர மாவட்டத்தில் பாதை அபிவிருத்திக்காக 250 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

பயணிகள் போக்குவரத்து: பயணிகளுக்கு டிக்கெட் வழங்கும் முறை இன்று முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. வடமத்திய மாகாணத்தில் இந்த நடைமுறையை விரைவாக அமல்படுத்துவதற்கு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், எரிபொருள் விலை குறைவு கணக்கிடப்பட்டு, பஸ் கட்டண திருத்தம் குறித்து தேசிய போக்குவரத்து ஆணையம் நாளை அறிவிக்கும் என அமைச்சர் கூறினார்.

மோட்டார் வாகனத் துறை: மோட்டார் வாகனப் போக்குவரத்துத் துறையில் பல மோசடிகள் மற்றும் ஊழல்கள் நடைபெறுவதாகவும், சரிந்து போயுள்ள அந்த நிறுவனத்தை மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், மக்களுக்கு ஏற்படும் இடையூறுகளுக்கு மன்னிப்பு கோருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

சட்டத்தின் ஆட்சி: தவறு செய்தவர்களுக்கு எதிராக உரிய விசாரணைகளுக்குப் பின்னர் சட்டத்தை அமல்படுத்த வேண்டும். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்டவர்களுக்கு சட்டத்தை அமல்படுத்தியிருந்தால், எதிர்காலத்தில் அர்ஜூன மகேந்திரன், பாஸ்கர் தாக்குதல் நடத்தியவர்கள் மற்றும் தாஜூதீன் கொலை தொடர்பானவர்களுக்கு எதிராகவும் சட்டம் அமல்படுத்தப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச, மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.

## ஐ.நா.வின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துக்கு கடிதமொன்றினைஇலங்கையின் ஆதரவைக் கோரியுள்ளார்.

ஈரான் இஸ்லாமிய குடியரசின் இலங்கைக்கான தூதுவர் அலி டெஸ்கோஸி நேற்று இதனைத் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஈரான் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இது தொடர்பாக விளக்கமளித்த ார்.

ஒரு தசாப்தத்துக்கு முன் நீக்கப்பட்ட தடையை மீள பிரகடனப்படுத்தியது தொடர்பாக இலங்கை மற்றும் மாலைதீவின் ஆதரவைக் கோரி கடதமொன்றினை அனுப்பி வைத்திருபதாக தூதவர் டெல்கோஸி தெரிவித்தார்.

பிரித்தானியா பிரான்ஸ் ஜேர்மனி ஆகிய நாடுகள் ஈரானைக் குற்றம்சாட்டியதையடுத்து ஈரான் இம் மூன்று நாடுகளின் தூதுவர்களைத். திருப்பி அழைத்தது. சர்வதேச சட்டத்தை அமெரிக்கா பொம்மையாக செயற்படுத்தி வருவதாகத் தெரிவித்த ஈரான் தூ துவர் இந்த நாடுகள் எடுத்துள்ள முடிவு சர்வதேச சட்டத்துக் மிகவும் ஆபத்தானதென்றும் மேலும் தெரிவித்தார்.

இப்போது ஈரான் இலக்காக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் இது நாளை தெற்காசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளும் இலக்காக்கப்படலாமென்றும் தூ துவர் டெல்கோஸி தெரிவித்தார். இது தொடர்பாக இலங்கை மாலைதீவு வெளிவிவகார அமைச்சர்களுக்கு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளோம். எமக்கு ஆதரவு வழங்குமாறு அதில் கோரியுள்ளோம் .இத் தீர்மானம் காரணமாக ஏனைய நாடுகளுடன் வர்த்தக தொடர்புகளை மேற்கொள்வதில் பாதிப்புகள் இல்லையென்றும் தூ துவர் குறிப்பிட்டார். இது தொடர்பாக இலங்கையின் பதிலை எதிர்பார்த்தியப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.




# கஹட்டோவிட்டவில் விமரிசையாக இடம்பெற்ற முப்பெரும் விழா!













கஹட்டோவிட்ட முஸ்லிம் பெண்கள் கல்வி வட்டத்தில் கடந்த ஞாயிறன்று முப்பெரும் விழா நடைபெற்றது.

கம்பஹா மாவட்டத்தில் 9 ஏ பெற்றோர், புதிய அரசியல் பிரதிநிதிகள் கௌரவம், மீலாதுன் னபி விழா என்பன வெகு சிறப்பாக இடம்பெற்றது.

இலங்கை வக்பு சபை உறுப்பினர் மௌலவி எம்.என்.எம்.இஜ்லான் (காஸிமி) தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுகளின் போது மாவட்டத்தில் 9 ஏ பெற்றோர்,அரசியல் பிரதிநிதிகள் , பிரமுகர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் முன்னாள் பணிப்பாளர் எம்.இஸட்.அஹமத் முனவ்வரின் வழிகாட்டலில் இடம்பெற்ற இந் நிகழ்வுகளின் போது பஸ்யால அல்லலமுல்ல ஸபீலுர் ரஷாத் அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி எம்.ஐ.எம்.சுஐப் தீனி சிறப்புரையாற்றினார்.

ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் அஷ்ஷெய்க் எம்.எம்.முஹம்மத், பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் இக்ராம் அஹமத் பாரி ஆகியோரும் உரையாற்றினர்.

வெலிகம நகர சபைத் தலைவர் யூ.ஜீ.எம்.அப்ராஸ், மினுவாங்கொடை நகரசபை உப தலைவி சுரையா பர்வின் ,அத்தனகலை பிரதேச சபை உறுப்பினர்களான அல்ஹாஜ் பிர்தௌஸ்,இன்சாப் ஆகியோரும் இதன் போது கௌரவிக்கப்பட்டனர்.

அத்தோடு இதன்போது முக்கிய பிரமுகர்கள் பலரும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

## ஜனாதிபதியிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடப்பட்டிருந்த நிலையில், குறித்த நூலின் பிரதியொன்றை ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவிடமும் தாம் ஒப்படைத்தாக மூத்த பத்திரிகையாளர் சுரங்க சேனநாயக்க தனது சமூக வலைதள பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

## குருக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதைகுழிகள் எனச் சந்தேகிக்கப்படும் இடங்களில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்குப் போதுமான நிதி, தமது அமைச்சிடம் இருக்கின்றது என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

மனிதப் புதைகுழிகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதன்படி, மட்டக்களப்பு, குருக்கள்மடம் மனிதப் புதைகுழிக்கான நிதி முழுமையாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார கூறினார்.

அத்துடன், யாழ்ப்பாணம், செம்மணி - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியின் அடுத்தகட்ட அகழ்வுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் அலுவலக மட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

உரிய நடைமுறைகளை விரைவில் பூரணப்படுத்தி, தேவையான நிதியை வழங்க நீதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய, மனிதப் புதைகுழி அகழ்வுக்கான நிதி விடயத்தில் எவ்வித சிக்கல்களும் இல்லை என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார சுட்டிக்காட்டினார்.

## றிஷாதின் அடிப்படை உரிமைகள் மனு 2026 மார்ச்சில் விசாரணை

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் 2021ஆம் ஆண்டு எந்தவொரு நியாயமான காரணமும் இல்லாமல் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் 2021ஆம் ஆண்டு எந்தவொரு நியாயமான காரணமும் இல்லாமல் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனுவை மார்ச் 25,2026 தினத்தன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உயர்நீதிமன்றத்தில் மூன்று நீதிபதிகள் முன்னிலையில் இவ் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மோடியைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாலிபான் தலைவர்களுக்கு பயண தடை உள்ள நிலையில், அமீர்கான் முத்தகி இந்தியா வர ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் அனுமதி வழங்கியுள்ளது.



www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 OCTOBER 04 - SATURDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# ஓரினச்சேர்க்கையின் பாதிப்புகள்

ஒரின சேரக்கையின் விளைவுகள் நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் சமூக மற்றும் தனிப்பட்ட அம்சங்களில் பார்க்கப்படுகின்றன. ஒருபுறம், இது காதல், பாலியல் ஈர்ப்பு, மற்றும் உணர்ச்சிப்பூர்வமான இணைப்பு என்று பல்வேறு வகைகளில் நியாயப்படுத்த முயற்சிகள் உலகளவில் நடந்து வரும் நிலையில் இதன் விளைவுகள் மிகவும் மோசமான ஒன்றாக அமையும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்ஓலை.

மறுபுறம், சமூக ரீதியான புறக்கணிப்பு, பாகுபாடு, மற்றும் மனநல பாதிப்புகளையும், சில சமயங்களில் பால்வினை நோய்த்தொற்றுகளின் ஆபத்தையும் சந்திக்க வேண்டியிருக்கலாம்.

உலகின் தோன்றிய எல்லா தத்துவார்த்த சித்தாந்தங்களும் இதனை முழுமையாக எதிர்த்து வருவதை நாம் காண கூடியதாக இருக்கிறது. இதற்கு மூல காரணம் என்னவென்றால் இந்த உறவுகளை மனித சமூகம் எந்தவொரு நிலையிலும் ஜிரணிக்க இயலாத அசிங்கமான ஒன்று என்பதே ஒட்டு மொத்த மனித சமூகத்தின் பொதுவான இயல்பு நிலையாகும்.

குறிப்பாக ஓரினச்சேர்க்கை எந்தவொரு நிலையிலும் அனுமதிக்கப்படாது என்று இஸ்லாமிய இறையியலில் ஒருமித்த கருத்து உள்ளது, மாறாக அது கடவுளின் பார்வையில் மிகப் பெரிய பெரும் பாவமாக உள்ளது. சில குர்ஆன் வசனங்கள் இந்த நடைமுறையையும் அதன் வன்முறையான கடவுள் மறுப்பையும் சுட்டிக்காட்டுகின்றன.

அதாவது ஆணும்-பெண்ணும் இல்லறம் எனும் நல்லறம் மூலமாக இணைந்து அதன்மூலம் மனிதசமுதாயம் பல்கி இல்லை பெருகும் வழிமுறையை இறைவன் ஏற்படுத்தியிருக்க, அதற்கு மாறாக நாகரீகம் என்ற பெயரிலும் சுதந்திரம் என்ற பெயரிலும் ஆணும்-ஆணும்,பெண்ணும்-பெண்ணும் இணையும் ஓரினச்சேர்க்கை மேலை நாடுகளில் தொடங்கி பின்பு நாளடைவில் உலக அளவில் தன் கிளை பரப்பி வருகின்றது.

ஆனால் இந்த நாகரிக உலகில் ஓரினச்சேர்க்கை குறித்து பார்வை பல்வேறு வழிகளில் நியாயப்படுத்த பட்ட ஒரு இழிவான பாதையை பல்வேறு நாடுகளிலும் பரப்பி வருவதைக் காண கூடியதாக உள்ளது. இது மனிதனை தன் சொந்த இனத்தின் மேன்மை மற்றும் உயர்வை மழுங்கச் செய்து மிருகத்தனமான நடவடிக்கைகளை மேற்கொள்ள தூண்டும் வகையில் அமைந்துள்ளது.

இறையியல் தத்துவம் மற்றும் மனிதன் நாகரிகம் சார்ந்த யதார்த்தமான நிலையில் மனித இனம் பல்கிப் பெருகி வளர வேண்டும் என்பதே யதார்த்தமான உண்மையாகும். இதனைத் சமீபத்திய மருத்துவ உலகம் உளவியல் ரீதியாக மன வியாதி அல்ல என்றும் ஓர் பாலுணர்வு கொண்ட இருவரிடமும் ஏற்படும் ஒரு செக்ஸ் என்று வகைப்படுத்தப்படுகிறது.

ஓரினச்சேர்க்கையாளர்கள் மீது ஒட்டு மொத்த உலகமும் ஏற்படுத்தும் கலாச்சாரப் பயம், பாரபட்சம், வன்முறை போன்ற சமூக அழுத்தங்களே அவர்கள் மிகப் பெரிய அளவில் சமூக கட்டமைப்பை விட்டு அப்புறப்படுத்துவது முதல் நிலையாக உள்ளது.

இது போன்ற சமூக புறந்தள்ளுதல் காரணமாக தனிமை உணர்வு, மனச்சோர்வு, மற்றும் உஜஏஃயுஜனுளு, ஹெபடைடிஸ் பி போன்ற நோய்த்தொற்று அபாயங்கள் ஏற்படலாம் என்று மருத்துவ உலகம் கருத்து தெரிவித்த நிலையில் இது குறித்து அவர்கள் சிந்திக்க வேண்டும் என்பதே நமது பார்வையாக உள்ளது.

ஹமாஸ் ஏற்றுக்கொண்ட பிறகு, நீடித்த அமைதிக்கு ஹமாஸ் தயாராக இருப்பதாக தான் நம்புவதாக டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

இந்நிலையில், காசாவில் அமைதியை முன்னேற்றுவதில் ட்ரம்பின் பங்களிப்புக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.

அதேவேளை, காசாவில் போர் தொடங்கியதிலிருந்து போர்நிறுத்தத்தை நோக்கிய மிக நெருக்கமான நடவடிக்கை இது என்று பாகிஸ்தான் குறிப்பிட்டுள்ளது.

அமைதிக்கான வாய்ப்பு மீண்டும் மூடப்பட அனுமதிக்கப்படக்கூடாது என்றும் பாகிஸ்தான் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஹமாஸுக்கு இறுதி எச்சரிக்கை விடுத்ததை அடுத்து, காசா பகுதிக்கான அமெரிக்காவின் அமைதித் திட்டத்தின் முதல் படிகளை ஏற்க ஹமாஸ் ஒப்புக்கொண்டுள்ளது.

அதன்படி, காசா பகுதியில் குண்டுவீச்சு நடத்துவதை நிறுத்துமாறு இஸ்ரேலுக்கு ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளதாக வெளிநாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு பதிலளிக்கும் விதமாக, இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் ஒரு சுருக்கமான அறிக்கையை வெளியிட்டு ட்ரம்பின் அமைதி திட்டத்திற்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளது.

ட்ரம்ப், நேற்று (3) தனது ட்ரூத் சமூக ஊடகப் பதிவில், ஹமாஸ் தனது

(எம்.ஐ. அப்துல் நஸார்)

முஸ்லிம்கள் நடத்திய ஊர்வலத்தில் மது மற்றும் பன்றி இறைச்சியை தடை செய்ய முயன்றதை அடுத்து, அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலம் ஷரியா சட்டத்திற்கு தடை விதிப்பதாக அறிவித்துள்ளது.

பன்றி இறைச்சி, மது மற்றும் லொட்டரி சீட்டுகளை விற்பனை செய்வதை நிறுத்துமாறு முஸ்லிம்களுக்குச் சொந்தமான கடைகளுக்கு அழுத்தம் கொடுக்கும் பிரச்சாரத்தை ஒரு இமாம் தொடங்கியதை அடுத்து, டெக்சாஸ் ஆளுநர் கிரெக் அபோட் மாநிலத்தில் ஷரியா சட்டத்திற்கு தடை விதிப்பதாக அறிவித்துள்ளார்.

மஸ்ஜித் அத்-தவ்ஹித்தின் இமாம் எப்.காசிம் இப்னு அலி கான், ஒரு கடை ஊழியரை எதிர்கொண்டு, இஸ்லாமிய சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட "ஹராமான" பொருட்களை விற்பனை செய்வதாக இமாம் கான், முஸ்லிம் வர்த்தகர்கள் இதற்கு இணங்க மறுத்தால் அவர்கள் புறக்கணிப்புகளையும் பொது போராட்டங்களையும் எதிர்கொள்ள நேரிடும் என எச்சரித்தார்.

பரவலான சீற்றத்தைத் தூண்டிய வைரலான வீடியோவில், இஸ்லாமிய போதனைகளை மீறும் முஸ்லிம் வர்த்தக நிறுவனங்களை இலக்குவைத்து நாடு தழுவிய எதிர்ப்பு இயக்கத்தினை ஆரம்பிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

"தங்கள் கடைகளில் ஹராமான பொருட்களை வைத்திருக்கும் அனைத்து முஸ்லிம் வர்த்தக நிறுவனங்களுக்கும் எதிராக ஒரு தேசிய எதிர்ப்பு மற்றும் ஆர்ப்பாட்டத்தை நாங்கள் தொடங்குகிறோம்" என கான் வீடியோவில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க - இஸ்லாமிய உறவுகள் சபை ஆளுநர் அபோட்டின் நடவடிக்கையை கடுமையாக முரண்படுவதைக் காண முடிகின்றது, அந்த வர்த்தக நிறுவனத்தில் "ஹராமான" பொருட்களை - இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்ட பொருட்களை - விற்பதன் மூலம் இஸ்லாமிய சட்டத்தை மீறுவதாக எச்சரிக்கின்றார்.

"இது பிரச்சாரத்தின் ஆரம்பம். போதுமான அளவிற்கு அமெரிக்காவிற்கும் உலகிற்கும் நாங்கள் அறிவிப்பை வழங்குகிறோம்," என கான் தெரிவித்துள்ளார்.

"தங்களை முஸ்லிம்கள் என்று அழைத்துக் கொள்ளும் மக்கள் தங்கள் கடைகளில் ஹராத்தை விற்கக்கூடாது, பன்றி இறைச்சி, மது மற்றும் சூதாட்டம் நிறுத்தப்பட வேண்டும்."

அச்சிடப்பட்ட எதிர்ப்புப் பலகைகளுடன் கடையின் முன் நின்று, முஸ்லிம் வர்த்தகர்கள் இலாபத்திற்காக தங்கள்






# ஷரீஆ சட்டத்துக்கு டெக்ஸாஸில் தடை

குற்றம் சாட்டும் ஒரு வைரல் வீடியோ வெளியானதையடுத்து சர்ச்சை ஏற்பட்டது.

"டெக்சாஸில் ஷரியா சட்டம் மற்றும் ஷரியா சார்ந்தவற்றையும் தடை செய்யும் சட்டங்களில் நான் கையெழுத்திட்டேன். எந்த வர்த்தக நிறுவனமும் எந்த தனிநபரும் இது போன்ற முட்டாள்களுக்கு பயப்படக்கூடாது." என அபோட் செவ்வாயன்று (09) இதற்கு பதிலளிக்கும் விதமாக, தெரிவித்தார்.

"இந்த நபர் அல்லது யாராவது, ஷரியா சட்டத்தை திணிக்க முயன்றால், உள்ளூர் சட்ட அமுலாக்கப் பிரிவினரிடத்திடம் அல்லது டெக்சாஸ் பொது பாதுகாப்புத் துறையிடம் முறைப்பாடு செய்யலாம்." என ஆளுநர் குறித்த இமாமை சுட்டிக்காட்டி கருத்துத் தெரிவித்தார்.

"டெக்சாஸில், அனைத்து ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கும் சட்டத்தின் கீழ் சம உரிமை இருக்கின்றது. மனித உரிமைகளை மீறும் எந்தவொரு சட்ட அமைப்பும் டெக்சாஸ் மாநிலத்தில் தடைசெய்யப்பட்டுள்ளது" என ஆளுநர் அபோட்டின் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அபோட் எந்த சட்டத்தைக் குறிப்பிடுகிறார் என்பதைக் குறிப்பிடவில்லை, ஆனால் 2017 இல் அவர் ஒரு மசோதாவில் கையெழுத்திட்டார், இது அமெரிக்க நீதிமன்றங்களில் முஸ்லிம் சட்டம் உட்பட எந்தவொரு வெளிநாட்டு சட்டத்தையும் நீதிபதிகள் பயன்படுத்துவதைத் தடை செய்கிறது.

ஹூஸ்டன் பகுதியில் உள்ள இஸ்லாமிய தேசத்துடன் இணைந்த பள்ளிவாயலுக்கு தலைமை தாங்கும் சாடியது, அதை "பயங்கரமானது" என்றும், ஷரியா என்றால் "இலகுவான வழி" என்றும் தெரிவித்துள்ளதுடன், அதை யூத மக்களுக்கான ஹலாச்சா அல்லது



கத்தோலிக்கர்களுக்கான கேனான் சட்டங்களைப் போன்றதல்ல எனவும் தெரிவித்துள்ளது.

"டெக்சாஸ் முஸ்லிம்கள் ஒரு நாளைக்கு ஐந்து முறை இறைவனிடம் பிரார்த்தனை செய்யும்போது, தர்மம் செய்யும்போது, ரமழானில் நோன்பு நோற்கும்போது, அல்லது அநீதிக்கு எதிராகப் பேசும்போது, பல நடைமுறைகளுடன், அவர்கள் ஷரியாவைக் கடைப்பிடிக்கிறார்கள்" என்று அமெரிக்க-இஸ்லாமிய உறவுகள் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

டெக்சாஸில் ஷரியா "தடைசெய்யப்பட்டுள்ளது" என்பது பொய்யான கருத்து என அந்தச் சபை தெரிவித்துள்ளது.

கானின் டிக்டோக் மற்றும் அவரது 17,000 பின்தொடர்பவர்களுக்கு வெளியிடப்பட்ட பல வீடியோக்களில், ஒரு முஸ்லிம் வர்த்தகருக்குச் சொந்தமான கடையில் ஒரு ஊழியருடன் கான் நம்பிக்கையை காட்டிக் கொடுப்பதாக குற்றம் சாட்டினார், மேலும் அவர்கள் இணங்கவில்லை என்றால் ஒருங்கிணைந்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் எச்சரித்தார்.

"தங்கள் கடைகளில் ஹராம் வைத்திருக்கும் அனைத்து முஸ்லிம் வர்த்தகர்களுக்கும் எதிராக ஒரு தேசிய அளவிலான எதிர்ப்பு மற்றும் ஆர்ப்பாட்ட பிரச்சாரத்தை நாங்கள் தொடங்குகிறோம்," என அவர் அறிவித்தார்.

"அவர்கள் தங்கள் பொருட்களை மாற்றிக்கொள்ள - அல்லது வேறு பகுதிக்கு வர்த்தகத்தைக் கொண்டு செல்ல - மாத இறுதி வரை அவகாசம் உள்ளது."

வீடியோவில், கான் தனது குறிக்கோள்கள் இஸ்லாத்தின் மத போதனைகளைக் கடைப்பிடிப்பதில் வேரூன்றியுள்ளன என்பதை மறுக்கவில்லை, ஆனால் அவர் சட்டத்திற்குள் செயல்படுவதாக வலியுறுத்தினார்.

அவர் இந்த முயற்சியை மத ரீதியான தொடர்பு - அல்லது தஃவாவின் ஒரு வடிவமாக கட்டமைத்துள்ளார்.

கான் பணியாற்றும் பள்ளிவாயலான மஸ்ஜித் அத்-தவ்ஹித், அமெரிக்க முஸ்லிம் சமூகத்தில் பலரால் தீவிரமானதாகக் கருதப்படும் ஒரு சர்ச்சைக்குரிய குழுவான நேஷன் ஒப் இஸ்லாத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தற்போது, இந்த இமாமினால் எந்த சட்டங்களும் மீறப்பட்டதாகத் தெரியவில்லை. வர்த்தக நிறுவனங்களுக்கு வெளியே அமைதியான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மேலும் வன்முறை அச்சுறுத்தல்கள் எதுவும் பதிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தேசிய ஒற்றுமை, பாதுகாப்பே ஊடகவியலாளர்களின் முதற்கடமை

## ஊடக அமைச்சர் டாக்டர் நலிந்த ஜெயதிஸ்ஸ

தேசிய ஒற்றுமை பாதுகாப்பே ஊடகவியலாளர்களின் முதன்மைக் கடமையாகும் என - சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் டாக்டர் நலிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லி ம் மீடியா போரத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்துற்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பு தபால் திணைக்கள கேட்போர் கூடத்தில் இன்று (27) இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னால் அமைச்சர்கள் , தூதுவர்கள், அரச அதிகாரிகள் ஊடகவியலாளர்கள் என பலர்கலந்து கொண்ட இந்நிகழ்வில் அமைச்சர் தொடர்ந்து தமதுரையில் :

நாட்டில் சமீபத்தில் இடம்பெற்ற சில சம்பவங்கள் பொதுமக்களின் வாழ்வை பெரிதும் பாதித்துள்ளன. அவை தொடர்பில் அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில், ஊடகவியலாளர்கள் தங்கள் பொறுப்பை மேலும் உணர்ந்து செயல்பட வேண்டுமென அமைச்சர் வலியுறுத்தினார்.

“வெறும் தகவல் வெளியிடுவது மட்டுமல்ல ஊடகவியலாளர்களின் முதன்மைக் கடமை தேசிய ஒற்றுமையை பாதுகாப்பதேயாகும்என அவர் குறிப்பிட்டார்.

இலங்கை பல தசாப்தங்களாக உள்நாட்டு மோதல்களாலும் வன்முறைகளாலும் பாதிக்கப்பட்டுள்ளது. மக்கள் மனங்களில் இன்னும் அந்தக் காயங்கள் ஆறாமல் இருக்கின்றன. இத்தகைய சூழலில் சிறிய சம்பவங்களுக்குக் கூட பெரிய பிம்பம் அளித்து வெளிப்படுத்தினால் சமூகத்தில் பிளவு ஏற்பட வாய்ப்பு உண்டு. எனவே ஊடகங்கள் மிகுந்த பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

சில அரசியல் கட்சிகள் தமது அரசியல் இலாபத்திற்காக பல்வேறு திட்டங்களை முன்வைத்து செயல்படுகின்றன. ஆனால் ஊடகங்கள் அந்த அரசியல் வலைவீச்சுகளில் சிக்காமல், நாட்டின் நிலைத்தன்மை மற்றும் மக்கள் நலனுக்காக உண்மையை மட்டுமே வெளிப்படுத்த வேண்டும். மக்களின் நலனை முன்னிலைப்படுத்தி சமூக நல்லிணக்கத்தை வளர்க்கும் வகையில் செய்திகளை வெளிப்படுத்துவதே ஊடகத்துறையின் உண்மையான பணி ஆகும்.

சமூகத்தில் நிகழும் சிறிய சம்பவங்கள் கூட ஊடகத்தின் மூலம் மிகப்பெரிய செய்தியாக மாறுகின்றன. இத்தகைய செய்தி வெளிப்பாடுகள் இன, மத, கலாச்சார அடிப்படையில் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் அபாயம் உண்டு. அதேவேளை அரசு செய்யும் தவறுகள் மறைக்கப்படாமல், உண்மைகள் சரியான முறையில் வெளிப்பட வேண்டும் என்பதும் ஊடகங்களின் கடமையாகும் .

இந்த நாட்டில் சிங்களர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என பல இன, மத, கலாச்சாரக் குழுக்கள் இணைந்து வாழ்கின்றனர். இந்த வேறுபாடுகள் காரணமாக பிரிவினை தோன்றாமல், அனைவரும் இலங்கையர்கள் என்ற அடையாளத்தில் ஒன்றிணைய வேண்டியது அவசியம்.

பொருளாதார முன்னேற்றத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் தேசிய ஒற்றுமை அத்தியாவசியம் .

பொதுமக்களின் குரலை உலகிற்கு எடுத்துச் செல்லும் ஊடகத்துறை, சமூக அமைதியையும் ஒற்றுமையையும் காக்கும் பொறுப்பையும் ஏற்க வேண்டும். குறிப்பாக முஸ்லிம் ஊடகவியலாளர்கள் தேசிய ஒற்றுமைக்காக கூடுதல் பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டிய அவசியம்.

மேலும் ஒற்றுமை வார்த்தைகளில் மட்டும் அல்ல, செயலிலும் தேவை நாம் ஒவ்வொருவரும் வேறு மதம், இன, கலாச்சாரப் பின்னணியிலிருந்து வந்தாலும், வெறும் வார்த்தைகளில் ஒற்றுமை எனச் சொல்லிக் கொண்டிருக்காமல், நாட்டின் அபிவிருத்திக்காக நமது திறமைகளையும் பங்களிப்புகளையும் வழங்க வேண்டும். ஊடகவியலாளர்கள் ஒரு தொழில் முனைவோர் அல்ல் அவர்கள் தேசிய முன்னேற்றத்திற்கு பொறுப்பேற்கும் முக்கிய சக்தி.

ஒரு அரசாங்கம் தவறுகள் செய்தால் அது தொடர்பான உண்மையான தகவல்கள் மக்களுக்கு சென்றடைய வேண்டும். அதே சமயம், தேவையற்ற பிளவுகள் ஏற்படாதபடி ஊடகங்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து செயல்படுவது மிக முக்கியம். இவ்வாறு செயல்பட்டால்தான் நாம் அனைவரும் இன, மத வேறுபாடுகளை மறந்து, ஒரே இலங்கையர்கள் என முன்னேற முடியும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.




### சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளிக்கப்படவில்லை என இலங்கை தமிழ் புத்தக பதிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் அவ்வமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 26 ஆண்டுகளாக கொழும்பு புத்தகக் கண்காட்சி நடத்தப்பட்டுவருகிறது. இலங்கை புத்தக வெளியீட்டாளர் சங்கத்தினால் நடத்தப்படும் இக் கண்காட்சியில் சிங்கள மொழி நூ ல்களுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் தமிழ் மொழி படைப்பாளர்கள், தமிழ் பதிப்பாளர்கள், தமிழ் நுகர்வோர் பல்லாண்டுகளாக பெரும் பாரபட்சங்களுக்கு உள்ளாகி வருகிறார்கள் என்பதை வருத்தத்துடன் வெளிப்படுத்த வேண்டியிருக்கிறது.

அத்துடன் இவ்வாறான புத்தக கண்காட்சிகளில் தமிழ் பேசும் சிங்களப் பேசும் கலைஞர்களுக்கிடையிலான பிணைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

துரதிஷ்டவசமாக தமிழ் படைப்பாளர்கள் போதியளவு புத்தக கடைகள் இல்லாததால் கலந்துகொள்வதில்லை.

கடந்த 26 ஆண்டுகளாகத் தொடரும் இந்த சிக்கல் இனிமேலும் தொடராமல் இருப்பதற்காகவே இந்த வேண்டுகோளை விடுக்கிறோம். இத்தனைகால இந்த நிகழ்வு இலங்கையின் பண்பாட்டு ஒன்றுகூடலாகவும், பண்பாட்டுப் பரிவர்த்தனைக்குமான களமாக ஆக்கப்பட்டிருக்க வேண்டும்.

சிங்கள மொழியில் வருடாந்தம் சுமார் 8000 நூல்கள் வெளியாகின்றன. தமிழில் 500 க்கும் குறைவான நூல்களே வெளியாகி வருகின்றன. இலங்கைத் தீவில் தமிழ் நூல்களுக்கான சந்தை மிகச் சிறியது. அதுமட்டுமன்றி இங்கு வெளியாகும் நூல்கள் பல 300 பிரதிகள் மாத்திரமே பதிக்கப்படும் நிலையே தொடர்கிறது.

இலங்கை புத்தக வெளியீட்டாளர் சங்கம் (SLBPA)ஆரம்பிக்கப்பட்டு 40 ஆண்டுகளை நெருங்கப் போகிறது. ஆனால் இதுவரை தமிழ் பதிப்பாளர்களை இணைத்துக்கொள்ள போதிய அக்கறை எடுத்துக்கொண்டதில்லை. இன்று 160 பதிப்பாளர்களை அங்கத்தவர்களாகக் கொண்டிருக்கும் இச்சங்கத்தில் ஓரிரு தமிழ் பதிப்பாளர்களே உள்ளனர்.

அதன் தலைமை இயக்குனர் சபையில் இருக்கும் எழுவரிலோ மேலதிக இயக்குனர்களாக இருக்கிற பதினோரு பேரிலோ அல்லது ஆறு பேரைக் கொண்ட ஆலோசனைக் குழுவிலோ ஒருவர் கூட தமிழ் பேசும் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் இல்லை.

இச்சங்கத்தின் இணையத்தளமும் அதன் பதிப்புகளும் கூட ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மட்டுமே உள்ளன.

ஏற்பாட்டாளர்களில் தமிழ் பேசும் தமிழ், முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் பிரதிநிதித்துவப்பட்டிருந்தால் குறைந்த பட்சம் அவர்களின் குரல்கள் அங்கே ஒலித்திருக்கும். குறைகள் அடையாளம் காணப்பட்டு நிவர்த்தி செய்யப்பட்டிருக்கக் கூடும்.

எனவே தமிழ் பதிப்புப் பரப்பில் ஏற்படுகிற பிரச்சினைகளை வெளியில் கொணர ஒரு அமைப்பாக இந்த சங்கத்தின் மூலம் ஒன்றும் செய்ய முடியாத நிலை தொடர்கிறது.

குறைந்தபட்சம் ளுடுடீீயு தாம் நடத்தும் சர்வதேச புத்தகக் கண்காட்சியையாவது பாரபட்சமின்றி நடத்தினால் நலிவடைந்திருக்கிற தமிழ் பதிப்பாளர்களுக்கு சிறிய ஆறுதலாவது கிடைக்கும்.

இதேவேளை இந்த விவகாரம் தொடர்பில் பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்க விரும்புகிறோம்.

- தமிழ் பதிப்பாளர்கள் உறுப்பினர்களாக உள்வாங்கப் படவேண்டும்!

- புத்தக் கண்காட்சியில் உரிய கடைகளை பெறுவதிலிருந்து, உரிய இடங்களை ஒதுக்குவது, வெளியீட்டு, பேச்சு போன்றவற்றுக்கான மேடைகளைப் பெறுவது, தமிழ் அறிவிப்புகள், விளம்பரங்கள், வசதிகள் என எல்லாவற்றிலும் இருக்கும் பாரபட்சம் அகற்றப்படவேண்டும். இப்போது ஒரு வீத தமிழ் கடைகள் கூட கண்காட்சியில் கிடையாது.

- தமிழ் வாசகர்களும் பயனடையக் கூடிய வகையில் தமிழிலும் வழிகாட்டல், விளம்பர பதாகைகள் அமையவேண்டும்.

- மிகப் பெரிய பதிப்பாளர்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டிருக்கிற அனுமதி மாற்றப்படவேண்டும். பதிலாக சிறு கடைக்காரர்களுக்கான வாய்ப்பு வழங்கப்பட்டு அவர்களுக்கான குறைந்த கட்டண அறவிடும் முறை கொணரப்படவேண்டும். சிங்கள பதிப்பகங்களுக்கு நிகரான வளர்ச்சியடைந்த பதிப்பாளர்களு ம்,விநியோகஸ்தர்களும் தமிழ்ச் சூழலில் இல்லை என்பதை கருத்திற் கொள்ளவேண்டும்.

- தமிழ் பேசும் மக்கள் தமது தேவையை அங்கு பெறக்கூடிய வகையில் அங்கே உதவக்கூடிய தமிழ் ஊழியர்களும் அங்கே போதிய அளவு பணிக்கமர்த்தப்படல் வேண்டும்.

- இலங்கைப் பதிப்பாளர்கள் சங்கம் என்கிற பெயரை உடைய ஒரு சங்கம் சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிச் சமூகங்களுக்கும் சமத்துவமான முறையில் இயங்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அதை ஒரு சிங்கள சங்கமாக வெளியில் உணரப்படும் நிலையை இச்சங்கத்தால் மாற்ற முடியும் என்று நம்புகிறோம்.

- இன்றும் தமிழ் பதிப்பாளர்கள் இலங்கையில் எதிர்நோக்கி வருகிற விசேடமான பிரச்சினைகளுக்கு குரல் கொடுப்பதற்கான ஒரு அமைப்பும் இலங்கையில் கிடையாது. இனியாவது இவை மாற வேண்டும் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, இணைப்பாளர் முஹம்மட் சப்ரி -தெரிவித்தார்

### காஸா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச கடல் பகுதியில் வைத்து இஸ்ரேலிய குழுவினர் இடைமறித்துள்ளனர்.

அங்கு வாழும் பலஸ்தீன மக்களுக்கு தேவையான உதவிகள் கிடைப்பதை இஸ்ரேலிய அரசாங்கம் தடுத்து வருகிறது.

பிரான்ஸ், கனடா, பிரித்தானியா உள்ளிட்ட முக்கிய ஐரோப்பிய நாடுகளில் சில பலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரித்தமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இஸ்ரேல் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது.

இந்நிலையில் துருக்கி, பலஸ்தீனம், மலேசியா, தென்னாபிரிக்கா, கொலம்பியா, இத்தாலி, பிரித்தானியா , கிரீஸ், அயர்லாந்து, பாகிஸ்தான், பெல்ஜியம், பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளில் பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

### இஸ்ரேலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடைமறிப்புகள் சட்ட விரோத கடத்தல் என்றும் அவர் வர்ணித்து ள்ளார்.

இஸ்ரேலின் கொலைக்களங்களில் சிக்கியுள்ள காஸா மக்களுடன் என் மன எண்ணங்கள் உள்ளன என்றும் அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவு செய்துள்ளார்.

# மாணவர்களை தண்டிக்கும் ஆசிரியர்களுக்கு தண்டனை வழங்கும் சட்ட திருத்தம்



எம்.எஸ். அமீர் ஹுசைன்

பாடசாலைகளில் தவறிழைக்கும் அல்லது குற்றங்களை புரியும் மாணவர்களை நல்வழிப்படுத்தும் நோக்கில் தண்டிக்கின்ற விடயம் சர்வ சாதாரணமாக நடைபெற்று வருகின்றது. இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியில் பாடசாலைக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட காலம் தொட்டு இந்த நிகழ்வு இடம்பெற்று வருகின்றது. ஒழுங்கான முறையில் பாட நேரத்தில் கற்றல் செயற்பாடுகளில் கவனம் செலுத்தாத போது, மாணவர்களுக்கிடையில் சண்டை பிடித்து குழப்பம் ஏற்படும் போது, பாடசாலை நேரத்தில் ஒழுக்க சீர்கேடுகளில் ஈடுபடும் போது, பாடசாலை சட்ட திட்டங்கள் ஒழுக்க மாண்புகளை மீறும் வகையில் நடந்துகொள்ளும் போது என்று பல சந்தர்ப்பங்களில் இத்தகைய மாணவர்களை தண்டிக்கும் நடைமுறைகள் உள்ளன. ஆரம்ப காலத்தில் இவ்வாறான தண்டிக்கும் முறைகளை பெற்றோர் அனுமதித்தாலும் அதற்கு சமூக அங்கீகாரம் இருந்தாலும் நாட்டில் சட்டங்கள், மனித உரிமை பார்வைகள் ஆழமான முறையில் நடைமுறைக்கு வந்த பின்னர் அவ்வாறான விடயங்கள் மறைந்து மாணவர்கள் எப்படி நடந்துகொண்டாலும் சில சந்தர்ப்பங்களில் ஆசிரியர்கள் அதனை கண்டு கொள்ளாமல் நடந்து கொள்ளும் நிலைமைகள் அண்மைக் காலமாக உருவாகி இருக்கின்றன.

இதன் விளைவு மாணவர்கள் பெற்றோர் எதிர்பார்க்கும் கற்றல் செயற்பாடுகளில் பலவீனமடைந்து திறமைகளை வெளிப்படுத்த முடியாதவர்களாக பின்னடைவு கண்டுவிட்டால் அதே ஆசிரியர்கள் மீதே பாரிய குற்றச்சாட்டுக்களும் முன்வைக் கப்பட்டு வரும் நிலைமைகள் உருவாகி உள்ளன. ஆசிரியர்கள் ஒழுங்காக கற்பிப்பதில்லை, மாணவர்களை கவனிப்பதில்லை, ஆசிரியர்கள் கடமை புறக்கணிப்பு செய்கின்றனர், என்றெல்லாம் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப் படுகின்றன. பிள்ளைகள் 06 மணித்தியாலங்களாக தமது பிள்ளைகள் பாடசாலையில் அதிபர், ஆசிரியர்களின் கண்காணிப்பின் கீழ் அவர்களது கட்டுப்பாட்டில் இருக்கின்றனர், அதனால் அரசாங்கத்தின் பாடவிதானத்தின் அடிப்படையில் கற்பித்தலோடு மேலதிகமாக ஒவ்வொரு பிள்ளையையும் பெற்றோருக்கும் வீட்டுக்கும் நாட்டுக்கும் நல்லவர்களாக மாற்றியமைத்து ஒழுக்க மாண்புகளை கடைப்பிடித்து பணிவன்புடன் திறமை, ஆற்றல்கள், ஆளுமை விருத்தியுடன் நாட்டிற்கு பயன்படக்கூடிய பிள்ளைகளாக வருவார்கள், சிறந்த பிரசைகளாக மிளிர்வார்கள் என்ற எதிர்பார்ப்புடன் பிள்ளைகளின் வெளிப்பாடு அமையும் என்ற பாரிய எதிர்பார்ப்பு ஒவ்வொரு பிள்ளையின் பெற்றோர்களிடமும் இருக்கின்றது.

ஆனாலும் சமூகத் தாக்கம், குடும்ப சூழ்நிலைகளில் ஏற்படுகின்ற பிரழ்வு நிலைமைகள், பௌதீக காரணிகள் போன்றவற்றின் மூலம் ஏற்படுகின்ற செல்வாக்கு அல்லது தாக்கம் காரணமாக மாணவர்கள் வழிதவறிப் போகும் நிலைமைகளும் உள்ளன. இவ்வாறான சூழ்நிலைகளில்தான் பிள்ளைகளை தண்டித்தாவது திருத்தி எடுக்க வேண்டும் என்று பாடசாலை பருவத்தில் ஆசான்கள் முயற்சி எடுக்கின்றனர். அதற்கான குரூரமான தண்டனைகள், கடுமையான அல்லது மாணவர்களால் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு உடல், உள , மானசீக ரீதியாக பாதிக்கும் வகையான எந்தவொரு செயற்பாட்டையும் பாடசாலைக்குள் அனுமதிப்பதில்லை. பழிவாங்கும் நோக்கத்தின் அடிப்படையில், சமூக, பொருளாதார ஏற்றதாழ்வுகளின் அடிப்படையில் அல்லது வேறு காரணங்களின் அடிப்படையில் வகுப்பறையில் ஒதுக்கல், பிள்ளைகளை வேறுபடுத்தி பராமரித்தல் போன்ற செயற்பாடுகளும் கல்வி அமைச்சின் சுற்று நிருபங்கள் மூலம் தடை செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் குற்றவியல் தண்டனைச் சட்டக்கோவை யிலும் திருத்தம் கொண்டு வரப்பட்டு பாடசாலைகளில் ஆசிரியர்கள் மாணவர்கள் மீது எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்ற அறிவுரைகள், வழிகாட்டல்கள் இருந்தாலும் மேலும் குறித்த சட்டத்தில் புதிய விடயங்களை உட்படுத்தும் வகையில் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றது. 2025.09.24 ஆம் திகதி இவ்வாறான மற்றுமொரு திருத்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப் பட்டிருக்கின்றது.

மகளிர் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சர் சரோஸா போல்ராஜ் இந்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். சட்டமூலம் தொடர்பான விவாதம் கடந்த 2025.09.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் இடம்பெற்றாலும் சட்டமூலத்தை நிறைவேற்ற வாக்கெடுப்பு நடத்தப்படாமல் பிறிதோர் தினத்திற்கு ஒத்திவைக்கப் பட்டிருக்கின்றது. குற்றவியல் தண்டனைச் சட்டத்தின் பிரிவுகளான 308, 314, மற்றும் 316 ஆகியவற்றிற்கே இவ்வாறு திருத்தம் முன்வைக்கப்பட்டு இந்த சட்டமூலம் வந்திருக்கின்றது. அந்த சட்டத்தின்படி பாடசாலைகளில் குறைந்த பட்ச அளவில் மாணவர்களுக்கு அவமதிப்பை ஏற்படுத்தும் வகையில் உடலியல் ரீதியாக தண்டனையளித்தல் சிறைத் தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படுகின்றது. 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க உடலியல் ரீதியான தண்டனை வழங்கும் முறையை தடுக்கும் வகையிலான சட்டம் நடைமுறையில் இருந்து நீக்கப்பட்டாலும் அந்தச் சட்டத்தில் பலவிதமான குறைபாடுகள் இருந்ததால் மேலும் திருத்தம் முன்வைக்கப் பட்டிருக்கின்றது.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு சட்டமாக வருமானால் பாடசாலைகளில் ஆசிரியர்கள், வீடுகளில் பெற்றோர், மத்ரசாக்கள், பிரிவெனாக்கள் மற்றும் குழந்தைகளை அல்லது சிறுவர் பராமரிக்கும் நிறுவனங்களில் பிள்ளைகள் மீது எந்தவகையிலும் குரூரமான முறையில் அல்லது உடலியல் ரீதியாக, வாய்வழியாக கடுமையான பேச்சுக்கள் மூலம் மற்றும் பிள்ளைகள் மானசீக ரீதியாக பாதிக்கப்படும் வகையில் தண்டனைகள் வழங்குவது அடிப்படை உரிமை மீறலாக கருதப்பட்டு தண்டனைக்குரிய குற்றங்களாக கருதப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் நாட்டில் பிள்ளைகள் அனைவரும் அந்தந்த மாவட்ட நீதிபதிகளின் பிள்ளைகளாக கருதப்படுகின்றனர் என்று சட்டம் தெரிவிக்கின்றது. அதன்படி வீடுகளிலும் பெற்றோர் பிள்ளைகள் குற்றங்களை அல்லது தவறுகளை செய்யும் போது எந்த வகையிலும் கொடூரமான முறையில் தண்டனைகளை வழங்க முடியாது. அத்தகைய சந்தர்ப்பங்களில் சட்டம் கடுமையாக பாயும் அபாயம் இருக்கின்றது.

நாட்டில் 10500 பாடசாலைகள் உள்ளன. 44 இலட்சம் மாணவர்கள் உள்ளனர். இவர்களுக்கு கற்பிப்பதற்காக சுமார் இரண்டு இலட்சத்து 35 ஆயிரம் ஆசிரியர்கள் அளவில் கடமையாற்றுகின்றனர். சுமார் 10,000 இற்கும் மேற்பட்ட அதிபர்கள் கடமையாற்றுகின்றனர். எவ்வாறாயினும் ஆசிரியர்கள் பாடசாலைகளில் பிள்ளைகளை தண்டிக்கும் போது மிகவும் அவதானமாக நடந்துகொள்ள வேண்டிய இடம் இதுவாகும் 2005 ஆம் ஆண்டு 20 வருடங்களுக்கு முன்னர் இத்தகைய சட்டத்தில் பல இணைப்புக்கள் செய்யப்பட்ட பின்னர் புதிதாக மீண்டும் குறித்த சட்டம் திருத்தம் செய்யப்பட்டிருக்கின்றது.

ஏன் இத்தகைய சட்டத் திருத்தம் அவசியப்படுகின்றது என்று சிந்தித்தால் காலம் மாற்றம் அடைந்திருக்கின்றது. 25 வருடங்களுக்கு முன்பிருந்ததை விட இப்போது மாணவர்கள் மத்தியிலும் மனித உரிமைகள், சட்டம் தொடர்பாக ஒருவிதமான விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கின்றது. தொடர்பாடல் திறன்கள் வளர்ச்சியடைந்திருப்பதோடு சிந்தனை ரீதியான மாற்றமும் வேகமாக ஏற்பட்டு வருகின்ற நிலையில் கட்டுப்பாடு, அடக்கம், பணிவு போன்ற நிலைமைகளை விட்டு மாணவர்கள் வெளியே வர முயற்சி செய்வதால் பிள்ளைகள் திருந்த வேண்டும், நல்வழிப்பட வேண்டும் என்ற அடிப்படையில் தண்டித்தாலும் அதனை பிள்ளைகள் தவறான புரிதல் மூலம் ஆசிரியர்களுக்கு எதிராக வைராக்கிய உணர்வோடு செயல்பட முற்படும் காலமாக மாறி இருக்கின்றது. போதைப் பொருள், மதுபான பாவனை மற்றும் தீய பழக்கவழக்கங்கள் மிக வேகமாக மாணவர்கள் மத்தியில் பரவி வருகின்றது. ஸ்மார்ட் போன் பாவனை காரணமாக மாணவர்கள் பாலியல் விவகாரங்களை சினிமாக்களை பார்த்து மிக மோசமான உணர்ச்சிகளால் தூண்டப்படுவதால் ஒருசில மாணவர்கள் பாடசாலைக்குள்ளேயே சக மாணவிகள் மீது பாலியல் இம்சைகள், துஷ்பிரயோகங்களை புரிகின்ற அளவிற்கு பாடசாலை சூழல் மாறி இருக்கின்றது.

அதே நேரம் அடிக்கடி ஆசிரிய மாணவ முரண்பாடுகள், அதிபர், மாணவர்களுக்கிடையிலான முரண்பாடுகள், பெற்றோர் ஆசிரியர் முரண்பாடுகள் என்று பாடசாலை சூழலை வன்முறை கலாசாரம் சென்றடைவதும் மிக மோசமான பரிணாம மாற்றமாக இருந்து வருகின்றது. இத்தகைய சூழ்நிலைகளில் இருந்து ஆசிரியர்களும் மாணவர்களும் பாதுகாக்கப்பட வேண்டும். ஆனாலும் மாணவர்களுக்கு மானசீக பாதிப்பை ஏற்படுத்துதல், அவதூறு உண்டுபண்ணுதல், உடலியல் ரீதியாக பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் கடுமையான தண்டனைகளை வழங்கும் போது குறித்த ஆசிரியர்கள், அதிபருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டு குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டால் ஆசிரியர் சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடும் என்ற அடிப்படையில் புதிய சட்ட திருத்தம் அமைகின்றது.

இந்த சட்டமூலம் தொடர்பாக பாராளுமன்றத்தில் பேசிய பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சட்டமூலம் குறித்து கடுமையான விமர்சனங்களையும் முன்வைத்துள்ளனர். பிள்ளைகள் தவறிழைக்கும் போது அதனை சுட்டிக்காட்டி தண்டிக்காமல் இருக்க முடியாது. வகுப்பறைக்குள் ஏனைய மாணவர்களது கற்றல் நடவடிக்கைகளுக்கும் கூட பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் முறைகேடாக நடந்து கொள்ளுதல், பாடசாலை ஒழுக்க மாண்புகளை மீறும் வகையில் ஒழுக்க சீர்கேடுகளை செய்யும் போது, தலைமுடி வெட்டாமல் அலங்கோலமாக வருகின்ற போது, நேரத்திற்கு வராத நிலையில், ஆசிரியர்களை மதிக்காமல் மரியாதை குறைவாக நடந்து கொள்ளும் போது போன்ற நிலைமைகளில் ஆசிரியர்கள், பெற்றோர், வளர்ந்தவர்கள் பிள்ளைகளை தட்டிக் கேட்பது, தேவையான சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் திருந்தி நல்லவர்களாக வரவேண்டும் என்ற நோக்கத்தில் தண்டிப்பது மரபாக இருந்து வருகின்றது.

இத்தகைய புதிய சட்டமூலம் இவ்வாறான நிலைமைகளை தண்டனைக்குரிய குற்றங்களாக கருதி சட்டத்தால் தடைகளை ஏற்படுத்தினால் பிள்ளைகளை பராமரிக்கும் பெற்றோர் எவ்வாறு தமது பிள்ளைகளை நல்வழிப்படுத்துவது, பிள்ளைகள் வழிதவறி தீய பழக்க வழக்கங்களுக்கும் போதைப் பொருளுக்கும் அடிமையாக குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் அச்சுறுத்தலாக மாறும் போது அதனால் ஏற்படும் இழப்பிற்கு யார் பொறுப்புக் கூறுவது என்ற கேள்வி எழுகின்றது.

இருந்தாலும் சித்திரவதை செய்வது, குரூரமான முறையில் தண்டனை என்ற பெயரில் பழிவாங்கும் அல்லது கடுமையான முறையில் தாக்குவது போன்ற நிலைமைகளை மானிட சமூகத்தில் ஒருபோதும் அனுமதிக்க முடியாது. எதுவானாலும் ஆசிரியர்கள் அவர்களது கல்வி அமைச்சின் சட்டதிட்டங்களுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டவர்களாக கடமையை செய்வதே இனிமேல் அவர்களுக்கு பாதுகாப்பாகும்.

ஆனாலும் ஒருசில பிள்ளைகளின் மோசமான நடத்தை காரணமாக ஏனைய அனைத்து பிள்ளைகளதும் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படுமானால் தண்டிக்காமல் அதிபர் மூலமாக அல்லது பாடசாலை ஒழுக்காற்று குழு மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அவ்வாறாயின் அத்தகைய பிள்ளைகளை பாடசாலையில் இருந்து வெளியேற்ற முடியுமா? அல்லது கல்வி அலுவலக அதிகாரிகள் பாடசாலைகளுக்கு சமூகம் தந்து இத்தகைய பிள்ளைகள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டி இருக்கின்றது. எதுவானாலும் அரசாங்கம் நாட்டிற்கு நல்லது செய்வதாக கருதிக்கொண்டு பிற்காலத்தில் நாட்டிற்கு பாரிய பின்னடைவுக்கு வழிவகுக்காமலும் இருக்க வேண்டும். பதவிக்கு வருகின்ற அரசாங்கங்கள் எதையாவது செய்தாக வேண்டும் என்ற நோக்கில் எங்காவது இருக்கின்ற சட்டங்களை திருத்தி புதியவைகளை புகுத்துவது திருத்தம் செய்வது மரபாக இருந்து வருகின்றது. அதே போன்றுதான் பிரதமர் ஹரினி அமரசூரியவின் புதிய கல்விச் சீர்திருத்தங்களும் இருக்கின்றன. எதுவானாலும் அனைத்து செயற்பாடுகளும் மக்கள் எதிர்பார்க்கின்ற சிறந்த பிரதிபலன்களை கொண்டு வரக்கூடிய வகையில் நாட்டிற்கு நலன் பயப்பதாக அமைய வேண்டும் என்பதே மக்களது எதிர்பார்ப்பாகும்.



# ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 30ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த பொதுக் கூட்டமும்

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 30ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த பொதுக் கூட்டமும் கடந்த செப்டம்பர் 27ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு - 10 இலுள்ள தபால் தலைமையக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

சுகாதார மற்றும் ஊடகத் துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பிரதம அதிதியாக பங்கேற்ற இந்தக் கூட்டத்தில் இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் பின் கமூத் அல் கஹ்தானி விசேட அதிதியாக பங்கேற்றிருந்தார். இதில் பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் புத்திஜீவிகள் எனப் பலர் பங்கேற்றனர்.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் ஊடகப் பணியினை முன்னெடுத்து வருகின்ற 15 ஊடகவியலாளர்களுக்கு சிங்கப்பூரிலுள்ள ரோயல் கிங்ஸ் குரூப் ஒப் கம்பனியின் தலைவர் எஸ்.எஸ். சிராஜூதீனினால் நிதியுதவியும் இதன்போது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.











இந் நிகழ்வில், சன்டே ஒப்சவர் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளின் முன்னாள் பிரதம ஆசிரியர் லக்ஷ்மன் குணசேகர, தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி ஆகிய பத்திரிகைகளின் முன்னாள் பிரதம ஆசிரியர் கே. குணராசா, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் நேத்ரா தொலைக்காட்சியின் பணிப்பாளர் நிலார் என். காசிம், நீர்கொழும்பு, கம்மல்துறையினைச் சேர்ந்த மூத்த ஊடகவியலாளர் எம்.ஜே.எம். தாஜுதீன், மாத்தளையைச் சேர்ந்த சிரேஷ்ட பிராந்திய செய்தியாளர் எம்.எஸ்.எம். மஸாஹிம், சிரேஷ்ட சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ், மொரட்டுவையைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.கே.எம். அஸ்வர், பேருவளையைச் சேர்ந்த சிரேஷ்ட பிராந்திய ஊடகவியலாளர் பி.எம். முக்தார், மருதமுனையைச் சேர்ந்த சிரேஷ்ட பிராந்திய செய்தியாளரும் இலக்கிய விமர்சகருமான ஜெஸ்மி எம். மூஸா, கிண்ணியாவினைச் சேர்ந்த சிரேஷ்ட பிராந்திய ஊடகவியலாளர் எச். எம். ஹலால்தீன், கண்டி - அலவதுகொடையினைச் சேர்ந்த சிரேஷ்ட பிராந்திய ஊடகவியலாளர் எஸ்.எம். எம். ஜவாத் மற்றும் ஊவா வானொலியின் சிரேஷ்ட அறிவிப்பாளர் மற்றும் நிகழ்ச்சித் தொகுப்பாளர் எம்.எப். பாத்திமா றிஸ்வானா ஆகிய 12 ஊடகவியலாளர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டதுடன், சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ், வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.















மேலும், இம் மாநாட்டின் போது, தமிழ்நாடு மனிதநேய கட்சியின் தலைவரும், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா தமிழில் எழுதிய "நபிகளாரின் சமூக வாழ்வு" எனும் தலைப்பிலான நூலின் சிங்கள மொழிபெயர்ப்பு ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தினால் வெளியிடப்பட்டது.







இதன் இரண்டாவது அமர்வில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. இதன்போது தலைவர், பொதுச் செயலாளர் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் நான்காவது தலைவராக விடிவெள்ளி பத்திரிகையின் ஆசிரியர் எம்.பி.எம். பைரூஸ் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். புதிய செயலாளராக தினகரன் பத்திரிகையின் பிராந்திய செய்தி ஆசிரியர் ஷம்ஸ் பாஹிம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இதேவேளை, பொருளாளராக கியாஸ் ஏ. புஹாரி போட்டியின்றி ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

போரத்தின் செயற்குழுவிற்கான தேர்தலில் 35 பேர் போட்டியிட்டனர். இதில் இர்ஷாத் ஏ. காதர், யூ.எல். மப்றூக், றிப்தி அலி, எம்.எப்.றிபாஸ், றம்ஸி குத்தூஸ், அஷ்ரப் ஏ. சமத், சமீஹா ஷபீர், ஸாதிக் ஷிஹான், எம்.ஏ.எம். நிலாம், ஷிஹார் அனீஸ், ஜெம்சித் அஸீஸ், எஸ்.எம். றிஸ்வான், எஸ்.என்.எம் சுஹைல், ஏ.எச்.எம். பௌசான் மற்றும் ஜாவிட் முனவ்வர் ஆகியோர் புதிய செயற்குழு உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.



# சாய்ந்தமருது மல்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலய மாணவர் பாராளுமன்ற அமர்வு





**(நூருல் ஹுதா உமர்)**

கல்வி அமைச்சின் 03/2019 சுற்றறிக்கைக்கு இணங்க, கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது மல்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலய மாணவர்களின் ஜனநாயக விழிப்புணர்வையும் தலைமைத்துவத் திறன்களையும் மேம்படுத்தும் நோக்கில், மூன்றாவது மாணவர் பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு பாடசாலை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

ஏனைய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களின் பங்கெடுப்புடன் நடைபெற்ற இந்த மூன்றாவது மாணவர் பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வை சபை செயலாளரும், அதிபருமான எம்.சி. நஸ்லின் றிப்கா அன்ஸார் உத்தியோகபூர்வமாக தொடக்கி வைத்தார்.

இவ்வமர்வில் மாணவர் பாராளுமன்றத் தலைவரும் (சபாநயகர்) பிரதமர், அமைச்சர்கள், சபை பிரதானிகள், உறுப்பினர்களும் தங்கள் பொறுப்புகளை உணர்வுடன் நிறைவேற்றினர்.

கல்வி, விளையாட்டு, கலாச்சாரம், சமூக சேவை, ஒழுக்கம் உள்ளிட்ட பல துறைகள் தொடர்பான கருத்துக்களும் முன்மொழிவுகளும் மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்களினால் விவாதிக்கப்பட்டன.

அமர்வில் கலந்து கொண்ட அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர்கள் மாணவர்களின் ஜனநாயக பங்களிப்பு மற்றும் பொறுப்புணர்வை பாராட்டி, எதிர்காலத் தலைமைத்துவ வளர்ச்சிக்கு இது போன்ற நிகழ்வுகள் முக்கிய பங்காற்றுவதாகத் தெரிவித்தார்கள்.

# காதர் மஸ்தான் எம்.பீ.யுடன் தமிழக பிரமுகர்கள் சந்திப்பு



**(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)**

கொழும்பில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீ லங்கா தொழிலாளர் கட்சி குழுத் தலைவருமான கே. காதர் மஸ்தான் மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் ஆடுதுறை ஷாஜகான், மாநில துணைச் செயலாளர் ஜமால் முஹம்மது இப்ராஹிம், தென்காசி மாவட்ட செயலாளர் சையது பட்டாணி, மூத்த ஊடகவியலாளர் திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது, சையது அபுதாஹிர் மிஸ்பாஹி ஆகியோர் (27) கடந்த சனிக் கிழமை சந்தித்து சால்வை அணிவித்து, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் வளர்ச்சி பணிகள் மற்றும் தமிழகம் அரசியல் நிலவரங்கள் குறித்து கலந்துரையாடினார்.

# ஆஸி எடித்கோவன் பல்கலையில் கலாநிதி பட்டம் பெற்ற சீனன்கோட்டை ஹிஜாஸ் ஹிராஸ் அஹமட்





**(பீ.எம்.முக்தார்)**

பேருவளை சீனன் கோட்டை பெருகமலையைச் சேர்ந்த முஹம்மத் ஹிஜாஸ் ஹிராஸ் அஹமட் அவுஸ்ரேலியா எடித் கோவன் பல்கலைக்கழகத்தில் தத்துவ டாக்டர் (நீர் சிகிச்சை) எடித் கோவன் யுனிவர்சிட்டி டாக்டர் ஒப் பிலோஸொபி (வோடர் டிரீட்மன்ட்) துறைக்கான கலாநிதி பட்டத்தை பெற்றுள்ளார்.

அவுஸ்ரேலியா பெர்த் மாநாட்டு மற்றும் கண்காட்சி மையத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின் போது இவருக்கு கலாநிதி பட்டம் வழங்கப்பட்டது. மேற்படி பல்கலைக்கழக வேந்தர் கயே மெக்மெத் இவருக்கான சான்றிதழை கையளித்தார்.

இவர் மலேசியா ஸ்வின்பேர்ன் தகவல் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் பொறியியல் இளங்கலை (ஹானர்ஸ்) (மெக்கானிக்கல்) பட்டத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெரியமுல்லை அஹதியா பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழா!




**(எம்.ஜே.எம்.தாஜுதீன்)**

கம்பஹா மாவட்ட நீர்கொழும்பு பெரிய முல்லை அஹதியா பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் அக்டோபர் மாதம் ஐந்தாம் திகதி நீர்கொழும்பு அல்- ஹிலால் மத்திய கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

விழாவின் பிரதம அதிதியாக சமய நல்லிணக்க பிரதியமைச்சர் அஷ்ஷேக் முனீர் முளப்பர் கலந்து கொள்கிறார்கள். விஷேட அதிதியாக ரசிக்க மல்லவாரச்சியும் கௌரவ அதிதியாக அல்ஹிலால் மத்திய கல்லூரியின் அதிபர் எம். எஸ். எம். ஷாக்கிரும் கலந்து கொள்கின்றனர்.

கொழும்பு மாவட்ட அஹதியா சம்மேளனத்தின் அதிபர் அஷ்ஷேக் பகியுதீன் விசேட சொற்பொழிவு ஆற்றுவார். இந்த வருடாந்த பரிசளிப்பு விழாவுக்கான ஏற்பாடுகளை பெரிய முல்லை அஹதியா சமய பாடசாலை அதிபர் உட்பட ஆசிரியர்கள் குழாமும் நிருவாக உறுப்பினர்களும் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாகாணப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்ற அஸீமுக்கு கௌரவிப்பு விழா





**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளராக கடமையாற்றி, கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ள ஏ.எஸ்.எம். அஸீமை பாராட்டி கௌரவித்து, பிரியாவிடையளிக்கும் விழா வியாழக்கிழமை (25) மாலை மாநகர சபை கேட்போர் கூடத்தில் சிறப்பாக நடைபெற்றது.

கல்முனை மாநகர சபையின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என். பரமேஸ்வர வர்மன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

அத்துடன் கல்முனை மாநகர சபையின் கணக்காளர் ஏ.எஸ். மனாஸிர் அஹ்சன், ஆயுள்வேத பொறுப்பு வைத்திய அதிகாரி ஜுமானா ஹஸீன் ஆகியோர் விஷேட அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இதன்போது கல்முனை மாநகர சபையின் வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம். நஹீம், பொறியியல் பிரிவின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ரஜனி சயானந்தன், வருமானப் பரிசோதகர் சமீம் அப்துல் ஜப்பார், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மூபீனா அமான், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.சி.ஜே. முஹைமினா, சாய்ந்த மருது பொது நூலகத்தின் நூலகர் ஏ.எல்.எம். முஸ்தாக், ஓய்வுபெற்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யூ.எம். இஸ்ஹாக் உள்ளிட்டோர் வாழ்த்துரை நிகழ்த்தினர்.

இதன்போது கடந்த 05 வருடங்களாக கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளராக அர்ப்பணிப்புடன் உன்னத சேவையாற்றிய ஏ.எஸ்.எம். அஸீம் அவர்களின் ஆற்றல், ஆளுமை மற்றும் வினைத்திறன் மிக்க செயற்பாடுகள் குறித்து எடுத்துணைக்கப்பட்டது.

இவ்விழாவில் உத்தியோகத்தர்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன.

இதன்போது மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ள ஏ.எஸ்.எம். அஸீம் நினைவுச் சின்னம் வழங்கி, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

# பாசிக்குடாவில் சிரமதானம்



**(எஸ்.எம்.எம். முர்ஷித்)**

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையும் கிழக்கு மாகாண நட்சத்திர விடுதிகள் உரிமையாளர் சங்கமும் இணைந்து (27) கடற்கரையை சிரமதானம் மூலம் சுத்தம் செய்யும் பணியினை மேற்கொண்டது.

இதன் போது, பாசிக்குடா மற்றும் அதனை அண்டிக்காணப்படும் யானைக்கல் மலை, கடற்படை முகாம் என சுமார் 5 கிலோ மீற்றர் சுற்றுவட்டாரத்தில் குறித்த சிரனதானப்பணி முன்னெடுக்கப் பட்டது.

கிழக்கு மாகாண நட்சத்திர விடுதிகள் உரிமையாளர் சங்கத்தலைவர் ரணிக்க தலைமையில் இடம்பெற்ற இச்சிரமதானப்பணியின் போது, நட்சத்திர விடுதி முகாமையாளர்கள், ஊழியர்கள் மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

குறித்த பணியின் போது சுமார் 500 கிலோ கிராம் எடையுள்ள பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு அகற்றப்பட்டன.

குறித்த பணியில் ஈடுபட்ட மற்றும் ஒத்துழைப்பு வழங்கி அனைவருக்கும் கிழக்கு மாகாண நட்சத்திர விடுதிகள் உரிமையாளர் சங்கத்தினர் நன்றி தெரிவிக்கின்றனர்.

# மார்பகப் புற்று நோயும், தீர்வும்!



ஏ.டபிள்யு .எம் சமீம்

பெண்கள் மத்தியில் பெரும் சவாலாகவும் அச்சுறுத்தலாகவும் இருக்கின்ற மார்பகப் புற்று நோய் தொடர்பாக கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் சிரேஷ்ட பொது சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் டாக்டர். ஏ.டபிள்யு .எம் சமீம் வழங்கிய விழிப்புணர்வு!

மார்பகப் புற்றுநோய் - முழுமையான பார்வை

மார்பகப் புற்றுநோய் (டீசநயளவ ஊயஉநச) உலகளவில் பெண்களிடம் அதிகம் காணப்படும் புற்றுநோய் வகைகளில் முதலிடத்தில் உள்ளது. மார்பகத்தில் உள்ள செல்கள் கட்டுப்பாடின்றி வளர்ந்து கட்டி (வரஅழுச) உருவாக்கும் நிலையே மார்பக புற்றுநோய். இது பெண்களிடம் அதிகம் காணப்படுகின்ற ஒரு புற்றுநோயாகும். இது ஆண்களுக்கும் அரிதாக வரக்கூடும்.ஆரம்பத்திலேயே கண்டறியப்பட்டால், குணமடையும் வாய்ப்பு 90மூ மேல் இருக்கிறது.

உலக சுகாதார அமைப்பின் WHO 2024 அறிக்கை படி, உலகில் ஆண்டுதோறும் சுமார் 2.3 மில்லியன் புதிய நோயாளிகள் மார்பக புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த நோய் பெண்களில் முதலிடம் வகித்துவரும் ஒரு நோயாகும் .

இன் நோயினால் உலகில் ஆண்டுதோறும் சுமார் 6,85,000 பேர் உயிரிழக்கின்றார்கள்

இலங்கையில் புற்றுநோயாளர்களின் பதிவுகளின்படி, பெண்களில் மிக அதிகமாக கண்டறியப்படும் புற்றுநோய் மார்பக புற்றுநோயாகும் இது இலங்கையைப் பொறுத்தவகையில் பாரிய நிலையை தோற்றுவிக்கும் வகையில் இதன் வேகம் அதிகரித்து காணப்படுகின்றது.

தெற்காசியாவை பொறுத்த வகையில் புற்றுநோயினால் பாதிக்கப்படும் பெண்களில் சுமார் 25 - 30மூ மாணவர்கள் மார்பக புற்றுநோயினால் பாதிக்கப்படுகின்றனர் என கணிக்கிடப்பட்டுள்து.

காரணிகள் (Risk Factors)

**மார்பகப் புற்றுநோய் ஏற்படும் காரணிகள் பலவாக உள்ளன:**

1. வயது - 40 வயதுக்கு மேல் அதிகமாக ஏற்படும்.
2. குடும்ப வரலாறு - தாய், சகோதரி போன்ற நெருங்கிய உறவினர்களுக்கு புற்றுநோய் இருந்தால் அபாயம் அதிகம்.
3. ஜெனெடிக் காரணிகள் - BRCA1, BRCA2 போன்ற மரபணு மாற்றங்கள்.
4. ஹார்மோன் காரணிகள் - அதிக ஈஸ்ட்ரஜன் ஹார்மோன் சுரப்பு.
5. வாழ்க்கை முறை - புகைபிடித்தல், மதுபானம், உடல் பருமன், உடற்பயிற்சி குறைவு.
6. பெற்றோர்கள் தொடர்பான காரணிகள் - திருமணம் தாமதமாக செய்வது, தாமதமாக குழந்தை பெறுவது, தாய்ப்பால் கொடுக்காதது.போன்ற மேற்சொன்ன காரிகளும் அடங்குகிறது.

**அறிகுறிகள் (Symptoms)**

மார்பகத்தில் வலி இல்லாத கட்டி

மார்பகத்தின் வடிவம் அல்லது அளவில் மாற்றம்

தோலில் தடிப்பு, குழியாதல் (Peau d'orange)

நிபிள் உள்ளே இழுக்கப்படுதல் அல்லது ரத்தம்ஃசுரப்புகள் வருதல்

கைமடியில் (யுஒடைடய) கட்டி

சில நேரங்களில் வலி அல்லது எரிச்சல் உணர்வுகள் ஏற்படும்

கண்டறிதல் (Diagnosis)

1. சுய பரிசோதனை (Self-Examination) – மாதந்தோறும் மாதவிடாய் முடிந்த 5–7 நாட்களுக்குப் பிறகு பெண்கள் தாமே மார்பகத்தை பரிசோதிக்க வேண்டும்.
2. மருத்துவ பரிசோதனை (Clinical Examination) – மருத்துவர் வருடத்திற்கு குறைந்தது ஒருமுறை பரிசோதனை செய்ய வேண்டும்.
3. படப்பரிசோதனை (Imaging Tests)

மாமோ கிராம் (Mammogram) – 40 வயதுக்கு மேல் முக்கியமான பரிசோதனையாகும்

அல்ட்ராசவுண்ட் (Ultrasound). கதிரியக்கவியல் பரிசோதனை மற்றும்

எம்.ஆர்.ஐ (MRI) – சில சிறப்பு நிலைகளில் தேவை ஏற்படின்

4. திசு பரிசோதனை (Biopsy) – கட்டி புற்றுநோயா என்பதை உறுதிப்படுத்த.இந்த பரிசோதனை செய்யப்படுகின்றது

**சிகிச்சை (Treatment)**

மார்பகப் புற்றுநோய்க்கான சிகிச்சை நோயின் நிலை (Stage) மற்றும் நோயாளியின் உடல்நிலை ஆகியவற்றைப் பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது:

1. அறுவை சிகிச்சை

Lumpectomy – கட்டியை மட்டும் அகற்றுதல்.

Mastectomy – முழு மார்பகத்தையும் அகற்றுதல்.

2. கதிர்வீச்சு சிகிச்சை (Radiotherapy) – அறுவை சிகிச்சைக்கு பின் மீதமிருக்கும் புற்று நோய் செல்களை அழிப்பது

3. fPNkhnjugp (Chemotherapy) – மருந்துகள் மூலம் புற்று செல்களை அழித்தல்.

4. ஹார்மோன் சிகிச்சை (Hormone Therapy) – ஹார்மோன் சார்ந்த புற்றுநோய்களுக்குரிய சிகிச்சை முறை

5. இம்மியூனோதெரபி (Immunotherapy) / Targeted Therapy – புதிய மருந்து முறைகள்.

தடுப்பு (Prevention)

மாதந்தோறும் சுய பரிசோதனை செய்தல்.

40 வயதுக்கு மேல் ஆண்டுதோறும் மாமோ கிராம் பரிசோதனை.

உடல் பருமனை கட்டுப்படுத்துதல்.

ஆரோக்கியமான உணவு, காய்கறி, பழவகைகளை அதிகம் உட்கொள்ளுவதுடன் தினசரி உடற்பயிற்சி செய்ய வேண்டும்


புகைபிடித்தல் , மது பானங்கள் அருந்துவது போன்றவற்றை கடடயம் தவிர்த்தல் வேண்டும்

பெண்கள் குழந்தை பெற்ற பின் தாய்ப்பால் கொடுப்பதன் மூலம் மார்பகப் புற்று நோய் தடுக்கப்படுகின்றது.

**முடிவு**

மார்பகப் புற்றுநோய் ஆரம்பத்தில் கண்டறிந்தால் குணப்படுத்தக்கூடிய நோயாகும். பெண்கள் தங்கள் உடலில் ஏற்படும் சிறிய மாற்றங்களைக் கூட கவனித்து உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும். "ஆரம்பத்திலேயே கண்டறிதல் - உயிரைக் காப்பதற்கான முக்கிய வழி" என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

தற்போது மார்பகப் புற்று நோய்க்கான பரிசோதனைகளும் சிகிச்சைகளும் அரச வைத்தியசாலைகளில் இடம்பெபெற்று வருகின்றது அந்த வகையில் சிரேஷ்ட பொது சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் டாக்டர். ஏ.டபிள்யு. எம். சமீமின் வழிகாட்டலின் கீழ் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் இந்த நோய்க்கான ஆலோசனைகளும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சிகிச்சைகள், மற்றும் அறுவைச் சிகிச்சைகள் என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







# வாசிப்பு சார் மூலோபாய நுட்பங்களைப் புரிந்து கொள்ளல்

எவ்வாறு வாசிப்பது? என்று விடயத்தை கற்றுக் கொள்வது மிகுந்த மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்றாக இருப்பது போல வாசிப்பின் ultimate Goal என்ன என்பதையும் புரிந்து கொள்ள வழியமைக்கும்.

மாணவர்களுக்கு மிகவும் இன்றியமையாத ஒரு திறனாக இது அமைகின்றது. இதனூ டாக தத்தமது வாசிப்பின் வேகத்தையும் வீச்செல்லையையும்

கட்டங்கட்மாக மேம்படுத்திக் கொள்ள முடியும்.

இத்தகைய நுட்பங்களை மாணவர்கள் மிகச் சரியாக அடையாளம் கண்டு புரிந்து கொள்கின்ற பொழுது வாசிப்பிலே இன்னும் இன்னும் ஆர்வம் ஏற்படுவது போல கடந்த காலத்தில் வாசித்த வேகத்தை விட மிக வேகமாகவும் செரிமானம் அடையச் செய்யக் கூடியதாகவும் வாசிப்பை பலப்படுத்திக் கொள்ள முடியும் வளப்படுத்திக் கொள்ளவும் முடியும்.

இதைத் தெரிந்து கொள்ளாதபொழுது வாசிப்போடு மல்லுக்கட்டி சண்டையிட்டு ளவசரபபடந கொண்டுதான் புத்தகங்களோடு எங்களுடைய பயணத்தை சுமந்து திரிய வேண்டி வரும்.

Reading strategies and techniques

குறித்த அடிப்படை அறிவும் புரிதலும் மாணவர்களுக்கும் வாசகர்களுக்கும் இருக்கும் பட்சத்தில் வாசிப்பு எப்பொழுதும் அலுப்புத்தட்டாத ஒன்றாக, ஆர்வத்தை தூ ண்டி விடக் கூடியதாக மாறும். வாழ்க்கைக்கும் புத்துணர்ச்சியும் புதுத்தெம்பும் தரக்கூடிய ஒன்றாக இருந்து எம்மை முன்னோக்கி தள்ளிக் கொண்டே இருக்கும்.

இத்தோடு நிறுத்திக் கொள்வோம் என்ற இடம்பாடே வாசிப்பில் ஆர்வம் ஏற்பட்ட பிறகு யாருக்கும் உருவாகாது.

அதற்கு இந்த நுட்பங்கள் குறித்த தெளிவை நாங்கள் புரிந்து அதன் வழிகாட்டலின் கீழ் எங்களுடைய வாசிப்பை அமைத்துக்கொள்ள வேண்டும்.

ஒரே மாதிரியான நுட்பங்களுக்கூடாக வாசிக்க முடியாது. எல்லா மனோநிலையிலும் எல்லாப் புத்தகங்களையும் வாசித்து விடவும் முடியாது. வாசிப்பதற்கான மனோ நிலை, அவகாசம்,ஆர்வம் தேவை என்பது மறுக்க முடியாத உண்மை என்பது போலவே வாசிப்பு நுட்பங்கள் குறித்த வேறுபாடுகளை பன்மைப் பாடுகளையும் நாங்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

இங்கு நாங்கள் மூன்றே மூன்று விடயங்களைத் தான் உங்களுக்கு இலகுவாக அறிமுகம் செய்ய இருக்கின்றோம்.

Reading strategies are specific procedures that helps students look at printed words and interpretate there meaning.

பிரதியில் texted words/printed அச்சாகி இருக்கின்றவற்றை எமது நிகழ்கால நடைமுறை நிஜ வாழ்வில் பிரதிபலிப்பதே சுநகடநஉவ வாசிப்பின் பிரதான எதிர்பார்ப்பு ultimate Goal

Making connection

மாணவர்களுக்கு ஏற்கனவே பரீட்சயமான சொற்களை புதிதாக வாசிக்கக்கூடிய பந்தியிலிருந்தோ நூல்களில் இருந்தோ கருத்துக்கள் சிந்தனைகள் போன்றவற்றில் இருந்தோ வரக் கூடிய சொற்களோடு நெருக்கமான தொடர்பை உருவாக்கிக் கொண்டு ஏலவே அறிமுகமான கருத்துக்களின் பார்வையில் நின்று சற்று மேம்பட்டதாக சமகால சூழலை கருத்தில் கொண்டு வாழ்கின்ற சூழலோடு இணைத்துப் பார்க்கின்ற பொழுது அந்த சொல்லுக்கான கருத்து ஆழமானதாக அமைவதனை உணர முடியும்.

வாசிக்கின்ற விடயங்களை

வாழ்க்கைச் சூழலோடு அதில் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளோடு சவால்களோடு நெருக்கடிகளோடு இணைத்துப் பார்க்கின்ற பொழுது வாசிப்பின் கனதி அதிகரிக்கிறது. வாசிப்பு தர முனைகின்ற விசாலித்த பார்வை வேர் விட ஆரம்பிக்கும். வாசிக்கின்ற விடயத்தை வாழும் சூழலோடு இணைத்துப் பார்க்கின்ற பொழுது எங்களுடைய வாசிப்பின் வீரியம் விரிவடையும்

Inferencing

முதல் கட்டத்தில் இருந்து சற்று மேம்பட்டதாக கடந்த கால வாசிப்பு அனுபவம் வாழ்வனுபுவம் இரண்டிலிருந்தும் நிகழ் காலப்பயணத்தை நோக்கியதாக இந்த நுட்ப முறை அமைந்திருக்கின்றது.

அதாவது இதற்கு முன்னர் வாசித்த பொழுது மேற்படி விடயம் குறித்து ஒருவர் அறிந்திருக்கலாம் அல்லது அறியாமலே இருக்கலாம். அறிந்திருக்கும் பட்சத்தில் அந்த இடத்திலிருந்து புதிதாக எதனை நோக்கி எமக்கு செல்ல முடியும் எமது பார்வையை கோர்த்துவிட்டு விசாரிக்க முடியும் என்று பார்ப்பதே இந்த நுட்பத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது

கடந்த கால மற்றும் நிகழ்கால வாசிப்பை இணைத்து ஒப்பிட்டுப் பார்ப்பதன் படியாக வாசிப்பை மேம்படுத்திக் கொண்டு முன்னோக்கி நகர்வது இங்கு இடம் பெறுகிறது

Wind reading the text students take their past knowledge and arrive at a conclusion based on the clue they receive from what they have read

Synthesizing

Students combine new information with their Priya knowledge to formal letter new thought or idea

இந்த கட்டத்தில் தான் மாணவர்கள் தமது வாசிப்பை பல்வேறு விடயங்களோடு இணைத்து பார்த்து அடுத்த கட்டம் ஒப்பீடு செய்து பார்த்து மூன்றாம் கட்டம் இவை இரண்டு வழிமுறைகளுக் கூடாகவும் புதியதோர் கருத்தை சிந்தனையை உருவாக்கும் தரத்துக்கு வரக்கூடிய நிலைமை.

இந்த மூன்று எளிய நுட்பங்களின் அடிப்படை விடயங்களை புரிந்து கொண்டால் வாசிப்பு எமக்குள் ஒரு சிந்தனையாளரை கருத்தாளரை விமர்சகரை ஒப்பிட்டாளரை புத்தாக்கமிக்க innovative ஒருவரை நிச்சயம் உருவாக்கிவிடும்.

## மனநலமும் ஆலோசனையும் 87



# “உலகை வழி நடாத்த அன்பால் போஷியுங்கள்”

2025 ம் ஆண்டின் உலக சிறுவர் தினத்திற்கான இலங்கையின் கருப்பொருள் ”உலகை வழி நடாத்த – அன்பால் போஷியுங்கள்” என்ற கருத்தோட்டத்தை தாங்கி வருகிறது.

இந்த கருப்பொருளை முன்னிட்டு, பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சகம் 2025 செப்டம்பர் 25 முதல் அக்டோபர் 1 வரை நாடு முழுவதும் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து சிறுவர்களின் நலனையும் பாதுகாப்பையும் மேம்படுத்தும் பணிகளில் ஈடுபடுகிறது.

“அன்பால் கவனியுங்கள் – எங்கள் உலகை வெல்ல உதவுங்கள்” என்றும் இந்த கருப்பொருளை இலகுவான மொழியில் நோக்கலாம்.

இந்த கருப்பொருள் சிறுவர்களின் வாழ்வில் அன்பும் பாதுகாப்பும் எவ்வளவு முக்கியம் என்பதையும் அவை வாழ்வின் வளர்ச் சிக்கான மிக முக்கிய மான தேவை கள் என்ப தையும் நினை வூட்டுகிறது.

சிறுவர்கள் நலமாகவும் மகிழ்ச்சியாகவும் வளர, அவர்களுக்கு அன்பு, அரவணைப்பு, கல்வி, பாதுகாப்பு, ஆரோக்கியம், மரியாதை போன்றன அவசியமாகும்.

அன்புடன் பாதுகாக்கப்படும் சிறுவர்கள் நாளைய நல்ல மனிதர்களாகவும், தலைவர்களாகவும், கண்டுபிடிப்பாளர் களாகவும், சமுதாயத்தை முன்னேற்றும் பொறுப்பான குடிமக்களாகவும் வளர வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்பதையும் இது நினைவுபடுத்துகிறது.

ஆகவே, நாம் அனைவரும் சிறுவர்களை அன்புடன் கவனித்து, அவர்கள் கனவுகளை நனவாக்க உதவினால், அவர்கள் உலகை வெல்லும் வலிமையான தலைமுறையாக உருவாகு வார்கள்.

அதனால் இதற்கு பொருத்தமான விதத்தில் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதில் அவதானம் செலுத்துவது முக்கியமாகும்.


சிறுவர்தின நிகழ்ச்சிகள் கருப்பொருளுக்கு உட்பட்டு, முக்கியமாக சிறுவர்களின் மனநிலைக்கும், மேம்பாட்டுக்கும் பொருத்தமான விதத்தில் உள்வாங்கப்பட வேண்டும்.

சிறுவர்களின் தனித்துவத்தையும் பாடசாலை மற்றும் கல்வி நிறுவனங்களின் மரியாதையையும் பாதிக்காத விதமாக நிகழ்ச்சிகள் திட்டமிடப்படுவது முக்கியமாகும்.

நிகழ்ச்சி முழுவதும் சிறுவர்களின் பாதுகாப்பு, அன்பு மற்றும் கல்வி முன்னுரிமை ஆகியவற்றை கவனிக்கும் வகையில் இருப்பதே மிகவும் பொருத்தமாக இருக்கும் என்பதையும் இவ்வருட கருப்பொருள் நினைவுபடுத்துகிறது.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**




பயாஸா பாஸில்

# நேர முகாமைத்துவத்தில் பெண்கள்

நேரம் என்பது மனித வாழ்க்கையில் மிகவும் மதிப்புமிக்க வளமாகும். “நேரத்தை வீணாக்கினால், வாழ்க்கையே வீணாகும்” என்று சொல்லப்படும் அளவிற்கு, நேர முகாமைத்துவம் வாழ்க்கையைச் சிறப்பாக நடத்துவதற்கான அடிப்படைத் திறனாகும். பெண்கள் வாழ்க்கையில் பல பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதால், அவர்களுக்கு நேர முகாமைத்துவம் மிக அவசியமாகிறது.

### பெண்களின் பன்முகப் பணி

இன்றைய சமூகத்தில் பெண்கள் வீட்டு வேலைகளிலேயே மட்டும் அல்லாமல், கல்வி, தொழில், அரசியல், சமூகப் பணி போன்ற பல துறைகளிலும் பங்காற்றுகின்றனர். அவர்கள் அதிகாலை எழுந்து:

வீட்டைச் சுத்தமாக வைத்தல்,
உணவு சமைத்தல்,
குழந்தைகளின் கல்வி கவனித்தல்,
குடும்பத்தினரின் தேவைகளை பூர்த்தி செய்தல்,
அலுவலகம் அல்லது தொழில் சார்ந்த பொறுப்புகளை நிறைவேற்றல்,

எனப் பல்வேறு பங்களிப்புகளைச் செய்து வருகிறார்கள்.

இத்தனை பணிகளைச் சமநிலையுடன் மேற்கொள்வது எளிதான காரியம் அல்ல. அதற்காக நேரத்தைச் சீராகப் பகிர்ந்து பயன்படுத்தும் திறன் அவசியம்.

நேர முகாமைத்துவத்தின் நன்மைகள்

நேரத்தை சரியாக மேலாண்மை செய்தால் பெண்களுக்கு பல நன்மைகள் கிடைக்கின்றன:

1. குடும்பம் மற்றும் தொழில் சமநிலை - வீட்டு வேலை மற்றும் அலுவலகப் பொறுப்புகளை சமமாகப் பகிர்ந்து செய்ய முடியும்.
2. உடல் ஆரோக்கியம் திட்டமிட்ட அட்டவணை மூலம் உடற்பயிற்சி, ஓய்வு ஆகியவற்றுக்கும் நேரம் ஒதுக்க முடியும்.
3. மன அமைதி - வேலைச்சுமை குறைந்து மன அமைதி பெற முடியும்.
4. தனிநபர் வளர்ச்சி - புத்தகம் வாசித்தல், திறன் மேம்பாடு, பொழுதுபோக்கு போன்றவற்றில் ஈடுபட வாய்ப்பு கிடைக்கும்.
5. சமூக பங்களிப்பு - சமூகச் சேவைகளிலும், நற்பணிகளிலும் பெண்கள் ஈடுபட முடியும்.

பெண்கள் பின்பற்ற வேண்டிய சில வழிமுறைகள்:

1. தினசரி அட்டவணை அமைத்தல் - காலை முதல் இரவு வரை செய்ய வேண்டிய வேலைகளைப் பட்டியலிடுதல்.
2. முன்னுரிமை கொடுத்தல் - அவசரமான மற்றும் முக்கியமான வேலைகளுக்கு முதன்மை அளித்து முடித்தல்.
3. தொழில்நுட்ப உதவி பெறுதல் - சமையல் சாதனங்கள், ஒன்லைன் வசதிகள், டிஜிட்டல் நினைவூட்டிகள் போன்றவற்றைப் பயன்படுத்துதல்.
4. வேலைப் பகிர்வு - குடும்ப உறுப்பினர்களிடம் சிறு வேலைகளைப் பகிர்ந்து கொள்வது.
5. தனக்கென நேரம் ஒதுக்குதல் - தினமும் குறைந்தபட்சம் சில நிமிடங்களை ஓய்வு, ஆரோக்கியம், பொழுதுபோக்கு ஆகியவற்றிற்கு ஒதுக்குதல்.
6. “இல்லை“ என்று சொல்லக் கற்றல் - தேவையற்ற, நேரத்தை வீணாக்கும் செயல்களில் ஈடுபடாமல் தவிர்த்தல்.

நேர முகாமைத்துவம் என்பது பெண்களின் வாழ்க்கையை ஒழுங்குபடுத்தி, அவர்களை வெற்றியின் உச்சிக்குக் கொண்டு செல்லும் சக்தி வாய்ந்த கருவி ஆகும். நேரத்தைச் சரியாகக் கையாளும் பெண்கள் குடும்பத்தில் அன்பும் அமைதியும், தொழிலில் முன்னேற்றமும், சமூகத்தில் சிறப்பான இடமும் பெற முடியும்.

ஆகையால், “நேரத்தை ஆட்சி செய்யும் பெண், வாழ்க்கையையே ஆட்சி செய்ய முடியும்” என்று சொல்லலாம்.

# விஜேராம வீட்டை மதிப்பீடு செய்யாது அரசிடம் ஒப்படைக்க முடியாது

## நளிந்தவுக்கு மஹிந்த பதில்



விஜேராம உத்தியோகபூர்வ இல்லத்தின் சொத்துக்கள் மற்றும் உபகரணங்களை மதிப்பீடு செய்யாமல் வீட்டை ஒப்படைக்க முடியாது என மகிந்த தரப்பு தெரிவித்துள்ளது.

விஜேராம உத்தியோகபூர்வ இல்லத்தில் அரசுக்கு சொந்தமான சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் உள்ள நிலையில் அவற்றை மதிப்பீடு செய்து அடையாளப்படுத்தாமல் வீட்டை ஒப்படைக்க முடியாது என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதன்படி, மதிப்பீட்டு பணிகளை மேற்கொள்ளாமல் வீட்டை ஒப்படைத்தால் “மகிந்த ராஜபக்ச, அரச சொத்துக்களை லொறியில் ஏற்றிச் சென்றுவிட்டார்“ என்று குற்றஞ்சாட்டுவார்கள் என அவரது ஊடக பேச்சாளர் மனோஜ் கமகே மேற்கண்ட விடயங்களை சுட்டிக்காட்டி கூறியுள்ளார்.

நளிந்த ஜயதிஸ்ஸ விஜேராம அரச உத்தியோகபூர்வ இல்லம் தொடர்பில் அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ முன்வைத்த குற்றச்சாட்டு குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித் ததாவது,

“முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கொழும்பு விஜேராம உத்தியோகபூர்வ இல்லத்தை இதுவரையில் அரசுக்கு ஒப்படைக்கவில்லை என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் குறிப்பிடும் பொய்களில் இதுவும் ஒன்றாகவே காணப்படுகிறது. விஜேராம இல்லத்தை ஒப்படைக்குமாறு ஜனாதிபதி செயலகம் 2025.09.24 ஆம் திகதியன்று தான் உத்தியோகபூர்வமாக கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

ஜனாதிபதி செயலகம்: நிச்சயிக்கப்பட்ட காலம் ஏதும் அந்த கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை. இந்த உத்தியோகபூர்வ இல்லத்தில் அரசுக்கு சொந்தமான சொத்துக்களும், ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவகத்துக்கு சொந்தமான சொத்துக்களும் உள்ளன.

இந்த சொத்துக்களை மதிப்பீடு செய்து அடையாளப்படுத்துமாறு குறித்த அரச அதிகாரிகளுக்கு நாங்கள் ஏற்கெனவே அறிவுறுத்தியிருந்தோம். அதிகாரிகள் இங்கு வருகைத் தந்து குறித்த மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதை தாமதப்படுத்தியதால் தான் இந்த வீட்டை ஒப்படைக்கவில்லை.

இல்லையென்றால் அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ “மகிந்த அரசுக்கு சொந்தமான சொத்துக்களை லொறியில் ஏற்றிச் சென்று விட்டார்“ என்றும் குறிப்பிடுவார்.

இவ்வாறான பின்னணியில் அரசாங்க தகவல் திணைக்களத்தின் அதிகாரிகள் இந்த வீட்டை காணொளியாக பதிவு செய்துள்ளார்கள்” என தெரிவித்துள்ளார்.






நாச்சியாதீவு பர்வீன்





# ஆனைவிழுந்தானுக்கு அழகு சேர்ந்த நண்பர் இம்தியாஸின் இலக்கிய படைப்புகள்

நண்பர், சகோதரர் அஹ்மட் இந்தியாஸ் அவர்களின் இரு நூல்கள் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டன. ஹொரவப்பொத்தானை பிரதேசத்தில் நடைபெற்ற மிகவும் அரிதான, சரித்திர முக்கியத்துவமிக்க நிகழ்வாக இந்த புத்தக வெளியீட்டு விழாவை நான் பார்க்கிறேன். அமைதியாக இருந்து மிகப்பெரும் அதிர்வை சகோதரர் இம்தியாஸ் ஏற்படுத்தி இருக்கிறார். தனக்குள் இருக்கின்ற மகத்தான எழுத்தாற்றலை, இந்த இரு நூல்களுக்கும் ஊடாக அவர் வெளிப்படுத்தி இருக்கிறார்.

பொதுவாக எமது பிரதேசத்தில் இவ்வாறான நிகழ்வுகள் நடைபெறுவதில்லை. எழுத்தாளர்கள், இலக்கிய படைப்பாளிகள் மிகவும் அரிதாக இருக்கின்ற இந்த பிராந்தியத்தில் நண்பர் இம்தியாஸ் அவர்களின் இந்த முயற்சி நிச்சயம் பாராட்டப்பட வேண்டியதும் கௌரவிக்கப்பட வேண்டியதுமாகும். வளர்ந்துவரும் எழுத்தாளர்களுக்கும் இலக்கிய படைப்பாளிகளுக்கும் நண்பர் இம்தியாஸ் ஒரு சிறந்த முன்னுதாரண புருஷராக மாறி இருக்கிறார்.




இவ்வாறான ஒரு புத்தக வெளியீட்டு விழாவை வெற்றிகரமாக நடத்தி முடித்தன் மூலமாக ஆனைவிழுந்தான் அல் ஹிஜ்ரா விளையாட்டு கழகம், விளையாட்டு கழகங்களின் பாரம்பரிய செல்நெறிக்கு அப்பால் சென்று முன்னுதாரணமிக்க சமூகப் பணி ஒன்றை நிறைவு செய்திருக்கிறது.

இந்த செயற்பாடு ஹொரவப்பொத்தானை பிரதேசத்தின் ஏணைய கிராமங்ளுக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கும் சிறந்த முன்மாதிரியாகும். அந்த வகையில் அல் ஹிஜ்ரா விளையாட்டு கழகத்திற்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**முஹம்மது தௌபீக்**
கலாநிதி கற்கை மாணவன்
மலேசியா
பல்கலைக்கழகம்.

## டிரம்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விதமாக, அனைத்து இஸ்ரேலிய பணயக்கைதிகளையும் விடுவித்து, மத்தியஸ்தர்கள் மூலம் பேச்சுவார்த்தை நடத்த ஹமாஸ் ஒப்புக்கொண்டுள்ளது

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் அமைதித் திட்டத்திற்கு ஹமாஸ் அமைப்பு முறையாக பதிலளித்துள்ளது.

காசா பகுதியின் நிர்வாகத்தை பாலஸ்தீனிய தொழில்நுட்ப வல்லுநர்களின் அரசாங்கத்திற்கு ஒப்படைக்கவும், இஸ்ரேலிய பணயக் கைதிகளை விடுவிக்கவும் தயாராக இருப்பதாக ஹமாஸ் அறிவித்துள்ளது.

எனினும், ஹமாஸின் ஆயுதமேவுதல் குறித்த கேள்விக்கு இந்த பதிலில் தெளிவான பதில் இல்லை.

அதற்கு பதிலாக, மீதமுள்ள பிரச்சினைகளை தீர்க்க மத்தியஸ்தர்கள் மூலம் உடனடியாக அமைதிப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடத் தயாராக இருப்பதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.

இந்த பதிலை வரவேற்ற ஜனாதிபதி டிரம்ப், அசாதாரணமான வீடியோ உரையில் இதனை “முன்னெப்போதும் இல்லாத” முன்னேற்றமாக வர்ணித்தார்.

“இந்தத் திட்டத்தை உருவாக்க உதவிய கத்தார், துருக்கி, சவுதி அரேபியா, எகிப்து, ஜோர்டான் உள்ளிட்ட பல நாடுகளுக்கு நன்றி தெரிவிக்கிறேன்,” என்று டிரம்ப் கூறினார். “இது மிகப் பெரிய நாள். இறுதி ஒப்பந்தம் உறுதியாகும் வரை காத்திருக்க வேண்டும்,” என்றார்.

பணயக் கைதிகளின் பாதுகாப்பான விடுதலையை உறுதி செய்ய வேண்டிய அவசியத்தை டிரம்ப் வலியுறுத்தினார்.

“கைதிகள் தங்கள் பெற்றோரிடம் திரும்புவதை எதிர்நோக்குகிறேன். இது பல வகைகளில் முன்னெப்போதும் இல்லாத நிகழ்வு,” என்று அவர் கூறினார்.

மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்துவதற்கு பரந்த பிராந்திய ஆதரவு முக்கியமாக இருந்ததாகவும், இந்த இலக்கு மிக அருகில் இருப்பதாகவும் டிரம்ப் தெரிவித்தார்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம், டிரம்பின் திட்டத்தின் “முதல் கட்டத்தை” செயல்படுத்தத் தயாராக இருப்பதாகவும், அனைத்து பணயக் கைதிகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தது.

“ஜனாதிபதி டிரம்ப் மற்றும் அவரது குழுவுடன் இணைந்து, இஸ்ரேலின் கொள்கைகளுக்கு ஏற்பவும், டிரம்பின் புரவலராகவும் போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கு முழு ஒத்துழைப்புடன் செயல்படுவோம்,” என்று இஸ்ரேல் அறிக்கை கூறியது.

எனினும், காசாவில் இஸ்ரேலின் குண்டுவீச்சு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்ற டிரம்பின் அழைப்பு குறித்து இஸ்ரேல் அறிக்கையில் எவ்வித குறிப்பும் இல்லை.

இது பணயக் கைதிகளின் விடுதலையை உறுதி செய்ய அவசியமான படியாக டிரம்ப் குறிப்பிட்டிருந்தார்.

இந்த முன்னேற்றங்கள், போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கான இராஜதந்திர முயற்சிகளில் இதுவரை இல்லாத மிக முக்கியமான நகர்வாகும். இருப்பினும், ஹமாஸ ின் ஆயுதமேவுதல் மற்றும் காசாவின் எதிர்கால பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்ற முக்கிய பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை.

# மாற்றுத்திறனாளிகளை மதிக்க கற்றுக்கொள்ளுவோம்!

(பாத்திமா சுபியானி)

இலங்கையில் மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டம், மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய செயலகம் (NSPD) மற்றும் பிற அமைப்புகள் செயல்படுகின்றன. மாற்றுத்திறனாளிகள் சமூகத்தில் முழுமையாக ஈடுபடுவதை உறுதிசெய்வதே இதன் நோக்கம்

மாற்றுத்திறனாளிகள் (physically, mentally, sensory அல்லது developmental challenges கொண்டவர்கள்) நமது சமூகத்தின் ஒரு அங்கமாக இருக்கின்றனர். அவர்கள் வாழ்கையில் எதிர்கொள்ளும் சவால்கள், போராட்டங்கள், வெற்றிகள் மற்றும் சமூகத் தத்துவங்கள் பற்றி தெரிந்து கொள்வது அவர்களை மதிக்கவும், சரியான உதவிகளை வழங்கவும் அவசியம். இந்த வாழ்க்கை வரலாற்று ஆய்வு அவர்களது அன்றாட அனுபவங்களையும், சமூகத்தில் அவர்களின் பங்கு மற்றும் நம் எதிர்பார்ப்புகளை ஆய்வு செய்யும் நோக்கத்தோடு எழுதப்பட்டுள்ளது.

### பின்புலம் மற்றும் ஆரம்ப வாழ்க்கை

மாற்றுத்திறனாளிகளின் தொடக்க வாழ்க்கை பெரும்பாலும் குடும்பம், உடல்நிலை, கல்விச் சூழல் மற்றும் சமூக அணுகலைப் பொறுத்தது. சிலருக்கு பிறக்கும்போது இருந்த நிலை காரணமாகவே சவால்கள் தோன்றுகின்றன் மற்றோருக்கு வாழ்க்கை வேதனையிலிருந்து ஏற்படும் மாற்றங்கள் (ஊசி நோய்கள், கோப்பு, விபத்து) காரணமாக நிகழ்கின்றன. ஆரம்பத்தில் பெற்றோர்கள், ஆன்மீக நம்பிக்கைகள், வளர்ப்பு சூழல் - all these shape their early identity and opportunities.

கல்வி மற்றும் திறன் வளர்ச்சி

கல்வி எளிதில் கிடைக்காத சூழல்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகம் பாதிப்பு அளிக்கின்றன. ஒத்துழைப்பான பள்ளிகள், சிறப்பு கல்வி மையங்கள், மற்றும் உட்பட்ட ஆதரவு இருந்தால் மட்டும் அவர்களது திறன்கள் மென்மையாக வளரும். பாடம் மட்டுமல்ல் சமூகக் கலைகள், வேலை பயிற்சிகள், தொழில்நுட்ப உதவிகள் (அஸிஸ்டிவ் டெக்னாலஜி) போன்றவை அவர்களுக்கு சுயமாக வாழ்க்கையை நிர்வகிக்க உதவும்.

### வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதாரம்

பணியின் வாய்ப்புகள் குறைவ் இருந்தாலும் அங்கீகாரம், ஊதியம் மற்றும் பாதுகாப்பு இல்லாத வேலைகள் அதிகம். சிலர் தற்செயலாக வேலைக்காக தேர்வு செய்யப்படுகிறார்கள் பொருளாதார சிக்கல்கள் காரணமாக குடும்ப ஆதாரமாகவே இவர்கள் பார்த்துக்கொள்ளப்படுகிறார்கள். சமூகமான ஊக்கம், தொழில் பயிற்சி திட்டங்கள் மற்றும் ஊக்க வருமான முறைமைகள் இவர்களின் பொருளாதார நிலையை உயர்த்தும்.

### குடும்பம், உறவுகள் மற்றும் சமூக அனுகல்

குடும்ப ஆதரவு மிக முக்கியம். அன்றாட கவனச்சூழல், மருத்துவச் செலவுகள், குழந்தைப் பராமரிப்பு போன்றவை குடும்பத்தினால் பகிரப்பட்டால் மட்டுமே வாழ்க்கை நன்றாக செல்கிறது. சமூகத்தில் அவர்களைப் பற்றி இல்லாத புரிதல், மறுப்பு அல்லது புறக்கணிப்பு இருப்பதால் மனநல்மீதின் பாதிப்புகள் ஏற்படுகின்றன. அதனால் சமூக விழிப்புணர்வு, பள்ளிகளில் உள்ள கட்டமைப்பு மற்றும் ஊழியர்முலம் மரியாதை அவசியம்.

### அவர்களின் முன்னேற்றத்திற்கான சவால்கள் மற்றும் தடைகள்

- உடல் மற்றும் சுகாதார சேவைகளுக்கு எளிதான அணுகலின் இல்லாமை.
- கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் சமூகவிரோதம்.
- போக்குவரத்து, கட்டிடஅமைப்பு போன்ற பயண வசதிகளின் குறைபாடுகள்.
- சட்ட ரீதியான பாதுகாப்பு மற்றும் சமூக நலத்துறைகளில் பற்றாக்குறை.
- வெற்றிகள் மற்றும் திறன்கள்

### மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் சவால்கள்

### வாக்குரிமை:

மாற்றுத்திறனாளிகள் தங்களின் வாக்குரிமையை முழுமையாகப் பயன்படுத்துவதற்கான வசதிகளை வலுப்படுத்துதல் மற்றும் ஊக்குவித்தல் அவசியம்.

சமூக மதிப்பளிப்பு:

சில சமயங்களில் மாற்றுத்திறனாளிகள் மீது மதிப்பு செலுத்தப்படுவதில்லை என்ற குறைபாடும் உள்ளது.

மாற்றுத்திறனாளிகள் பல்வேறு துறைகள், கலை, விளையாட்டு, தொழில், சமூக சேவையிலிருந்து சிரமங்களை சமாளித்து சாதனை படைக்கின்றனர். அவர்கள் காட்டும் பொறுமை, தீர்க்கதரிசனம் மற்றும் தனித்திறன் சமூகத்திற்கு பெரும் வரம்தான். அவர்கள் கதைகள் மற்றவர்களுக்கு ஊக்கமளிக்கின்றன.

சமூக பொறுப்புகள் மற்றும் ஆதரவு அமைப்புகள்

அறிவூட்டல்: பாடசாலைகள், உள்ளூராட்சி மன்றங்கள், ஊடகம் மூலம் தவறான முன்னுரிமைகளை தவிர்க்க வேண்டும்.

அடிப்படை வசதிகள்: சுகாதாரம், போக்குவரத்து, அணுகல் கட்டிடங்கள், உதவி கருவிகள்.

கல்வி மற்றும் வேலைவாய்ப்பு திட்டங்கள்: சிறப்பு கல்வி, தொழில்நுட்ப பயிற்சி, ஊக்குதல் வாரியங்கள்.

சமூக அங்கீகாரம்: சட்டங்களுக்கு இணங்கிய சமத்துவம், ஒதுக்கீடுகளை குறைப்பது.

குடும்பம் மற்றும் சமூகம்சேவை: நன்கொடை, உள்ளூராட்சி ஆதரவு, மனநல ஆலோசனை.

### பரிந்துரைகள்

1. பாடசாலைகளில் மாற்றுத்திறனாளிகளுக்கான பாடத்திட்டம் அறிமுகம் செய்யப்பட வேண்டும்.
2. நகராட்சி கட்டடங்களும் போக்குவரத்து வசதிகளும் அணுகல்படுத்தப்பட வேண்டும்
3. தனிநபர் மற்றும் நிறுவனங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கான தொழில் பயிற்சி மையங்களை ஆதரிக்கலாம்.
4. சமூக விழிப்புணர்வு நிகழ்வுகள், பாடசாலை கருத்தரங்குகள் நடத்துதல்.
5. சட்ட ரீதியான பாதுகாப்பு மற்றும் நிவாரண திட்டங்களை வலுப்படுத்துதல்.

மாற்றுத்திறனாளிகள் நம்மிடையே ஒரு பங்களிப்பாளர்கள் அவர்களின் வாழ்க்கை வரலாறு அனேக கடினமான போராட்டங்களால் நிரம்பியுள்ளது. அவர்களை மதித்து, அவர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்கி, சமத்துவமான சூழலை பொறுப்புடன் நிலைநிறுத்துவதே நம் சமூகத்தின் வளர்ச்சிக்கும் நாகரிகத்தின் அடையாளமாகும். அவர்களும் மனிதர்கள் -அவர்களது உரிமைகள், கனவுகள், மற்றும் திறமைகள் அனைத்தும் மதிக்கப்பட வேண்டும்.

# சமூக கலாசாரத்தைப் புரிந்துகொள்ள சிங்கள மொழி அவசியம்

## பிரதி அமைச்சர் முனீர் முளப்பர்





(ரிஹ்மி ஹக்கீம்)

பேருவளை ஜாமிஆ நளீமிய்யா இஸ்லாமிய கற்கைகள் பீட மாணவர்களுக்கு சிங்கள மொழியில் பயிற்சி வழங்கும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டுள் சிங்கள மொழிப் பயிற்சித் திட்டத்தின் தொடக்க விழா (23) பேருவளை ஜாமிஆ நளீமியா இஸ்லாமிய கலாபீடத்தில் தேசிய ஒருங்கிணைப்பு பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் தலைமையில் நடைபெற்றது.

தொடக்க விழாவில் உரையாற்றும் போதே பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய பிரதியமைச்சர், மதத் தலைவர்களுக்கு இருமொழி தொடர்பாடலில் திறன் பயிற்சி அளிப்பது இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை மேம்படுத்த உதவும் என்றும், அஸ்கிரிய பிரிவேனாவின் மாணவ பிக்குகளுக்கு ஏற்கனவே தமிழ் மொழி பாடநெறி வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

இந்நிகழ்வில், அரச கரும மொழிகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் திலக் ஹெட்டியாரச்சி, ஜாமிஆ நளீமிய்யா கலாபீட முதல்வர் உஸ்தாத் அஷ் ஷெய்க் ஏ.சி. அகார் முகம்மத், கலாபீட கல்வித்துறை பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஸீ. ஐயூப் அலி, இஸ்லாமிய கற்கைகள் துறை பீடாதிபதி அஷ்ஷெய்க் எஸ். எச். எம். பளீல் உட்பட விரிவுரையாளர்கள், சுமார் 50க்கும் மேற் பட்ட மாணவர்களும் கலந்து கொண்டனர்.







மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரியின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு மாவனல்லை பிரதேச சபை கேட்போர் கூடத்தில் அதிபர் ஏ.எல். ரஹ்மான் அவர்களின் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக மாவனல்லை வலய கல்வி பணிப்பாளர் திருமதி நிரோஷா பெர்னாண்டோ மற்றும் விஷேட அதிதியாக கேகாலை மாவட்ட உதவி பொலிஸ் அதிகாரி ஏ.எம்.ஜி.வசன்த அலககோன் அவர்களும் கலந்து சிறப்பித்ததோடு ஆசிரியர்கள் மாணவத் தலைவர்களின் பெற்றோர் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

படம்:பாரா தாஹீர் மாவனல்லை

# பேருவளையில் சிறப்பாக நடைபெற்ற நூல் வெளியீடு மற்றும் ஸீரா மாநாடு



(பீ.எம்.முக்தார்)

பேருவளை சீனன் கோட்டை (kanowladge forum) மனாரத் மகளிர் அமைப்பு இனைந்து ஏற்பாடு செய்த இறைதூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களது வாழ்க்கை சரிதையை விளக்கும் ஸீரா மாநாடு மற்றும் பேருவளை ஜாமிஆ நளீமியா கலாபீட சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்-ஷெய்க் கலாநிதி அரபாத் கரீம் (நளீமி) அவர்களினால் எழுதப்பட்ட அல் குர்ஆனிய வாழ்வைச் சுமந்த இறைதூதர் முஹம்மத் (ஸல்) என்ற நூல் வெளியீட்டு வைபவம் பேருவளை ணைஅஉைா மண்டபத்தில் 3ஆம் திகதி (03-10-2025) மாலை சிறப்பாக நடைபெற்றது.

சீனன் கோட்டை பள்ளிச்சங்கத் தலைவரும் ஜாமியா நளீமியா கலாபீட நிர்வாக சபை உப தலைவருமான ஏ.எச்.எம். முக்தார் ஹாஜியார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மலேசியா சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி தாவூத் அப்துல் மலிக் யஹ்யா அல் ஹிதாபி பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

# சிங்கள பேச்சுப் போட்டியில் கல்பிட்டி அல் அக்ஸா மாணவி தேசிய மட்டத்திற்கு தெரிவு

(அரபாத் பஹர்தீன்)



பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான இரண்டாம் மொழி சிங்கள பேச்சுப் போட்டியில் கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் தரம் 8இல் கல்வி பயிலும் மாணவி நசீம் ஆயிஷா மனால் மாகாண மட்டத்தில் முதலாம் இடம் பெற்று தேசிய மட்டத்திற்க்கு தெரிவாகி பாடசாலைக்கும் பிரதேசத்திற்க்கும் பெருமை சேர்த்துள்ளார்.

மேலும் தமிழை தாய் மொழியாக கொண்ட மாணவி சிங்கள மொழி பேச்சிப் போட்டியில் இவ்வாறான தொரு சாதனையை ஏற்கனவே ஆறாம் தரத்தில் கல்வி கற்ற வேளையில் நிலைநாட்டியமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதற்கைய இம்முறை இடம்பெற்ற கோட்ட மட்ட, வலய மட்ட மற்றும் மாவட்ட மட்ட போட்டிகளில் வெற்றியீட்டியிருந்த நிலையில் கடந்த வாரம் இடம்பெற்ற மாகாண மட்டப் போட்டியிலும் முதலிடம் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவானமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ் வெற்றிகளுக்கு இம் மாணவிக்கு வழிகாட்டிய பாடசாலையின் அதிபர்,பயிற்றுவித்த சிங்களப்பாட ஆசிரியைகளான பவானி,சந்தமாலி தனுஜா மற்றும் இணைப்பாளர் ஆசிரியை CSMF பரீன் இல்ஹாம் மற்றும் பெற்றோருக்கும் பாசாலை சமூகம் நன்றிகளையும், வாழ்த்துக்களையும் கூறிக் கொள்கிறது.

# நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய பாடசாலை கபடி அணி தேசிய மட்டத்தில் தங்கம் வென்று வரலாற்று சாதனை



(நூருல் ஹுதா உமர்)

அகில இலங்கை பாடசாலைகளுக் கிடையிலான கபடி போட்டி செப்டம்பர் 20,21,22,23 ஆம் திகதிகளில் நிந்தவூர் எம்.ஏ.சி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் கல்முனை கல்வி வலய நிந்தவூர் கமுஃகமுஃஅல் - அஷ்ரக் தேசிய பாடசாலையின் 20 வயது ஆண்கள் பிரிவு கபடி அணியினர் இறுதிப் போட்டியில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய கபடி அணியினரை எதிர்த்தாடி 56 :24 புள்ளி பெற்று கிழக்கு மாகாணம் சார்பாக அகில இலங்கை கபடிப் போட்டியில் முதல் தங்கம் வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளனர்.

மேலும் இப்போட்டியில் 2025 அகில இலங்கை பாடசாலைகளுக் கிடையிலான 20 வயது ஆண்கள் பிரிவில் சிறந்த வீரராக அப் பாடசாலையின் 20 வயது ஆண்கள் பிரிவு கபடி அணி தலைவர் ஏ.அப்துல் ஹாதி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதற்கான ஆலோசனை வழிகாட்டல் வழங்கி வழிப்படுத்திய கல்லூரி முதல்வர் ஏ.அப்துல் கபூர், பிரதி மற்றும் உதவி அதிபர்கள், இவ் வெற்றிக்கு காரணமாக இருந்து மாணவர்களை வழிகாட்டிய கபடிப் பொறுப்பாசிரியர் எம்.ஐ.எம். அஸ்மி, கபடி பயிற்றுவிப்பாளர்களான எஸ்.எம். இஸ்மத், எம். ரீ.அஸ்லம் ஸஜா, கே.எம். நப்ரீஸ், உடற்கல்வி ஆசிரியர் எம்.எம்.எம். ஹாஸீக், கபடி பொறுப்பாசிரியர் ஏ. ஹலீம் அஹமட் ஏனைய உடற்கல்வி ஆசிரியர்கள் ஆகியோருக்கும் அஷ்ரக்கியன் சமூகம் நன்றிகளை தெரிவித்துக் கொண்டுள்ளது.

# அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்





(கே .எ. ஹமீட்)

அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேயவிக்கிரம அவர்களின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர் கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ அவர்களின் தலைமையில் இன்று (30.09.2025) அம்பாறை மாவட்ட செயலக ஏ.ஐ.விக்கிரம கேட்போர் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளர் எம்.எஸ்.உதுமாலெப்பை, எம்.எஸ். அப்துல் வாசித், அஷ்ரஃப் தாஹிர், அபூபக்கர் ஆதம்பாவா, மஞ்சுல சுகத் ரத்நாயக, ஏ.எம்.எம்.எம். ரத்வத்தே, சட்டத்தரணி பிரியந்த விஜேரத்ன உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், மற்றும் திணைக்களத் தலைவர்கள் , உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# பலஸ்தீன விடுதலை கானல் நீரா!



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

ஜெருசலேம்: பாலஸ்தீனத்தை இப்போது தனி நாடாக இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகள் அங்கீகரித்துள்ளன.

இதுபோல பல நாடுகள் பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் சூழலில், பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பது சர்வதேச நாடுகள் மத்தியில் இதுவரை இல்லாத புதிய அரசியல் நிகழ்வை சர்வதேச நாடுகள் மத்தியில் ஏற்படுத்தும் வண்ணம் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

காசாவில் கடந்த சில ஆண்டுகளாகவே போர் தொடர்ந்தாலும் இப்போது நிலைமை அங்கு மோசமாக இருக்கிறது. அங்குள்ள எல்லாக் கட்டிடங்கள் மீது இஸ்ரேல் தீவிரமாகத் தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் அங்குள்ள மக்கள் கையில் கிடைத்த பொருட்களை எடுத்துக் கொண்டு வெளியேறி வருகிறார்கள். காசாவே முழுமையாக அழியும் சூழல் இப்போது ஏற்பட்டுள்ளது.

இந்தச் சூழலில் தான் பாலஸ்தீனத்தைத் தனி நாடாக இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகள் அங்கீகரித்துள்ளன. பிரான்ஸ் உட்பட மேலும் பல நாடுகள் விரைவில் இந்த அங்கீகாரத்தை வழங்கத் தயாராகி வருகின்றன. ஆனால், இந்த நடவடிக்கை ஹமாஸ் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஏற்கனவே எச்சரித்திருந்தார். அமெரிக்காவும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனம் என்பது இருக்கும், அதேநேரம் இல்லாத ஒரு நாடு. அதாவது உலகளவில் பாலஸ்தீன நாட்டிற்குக் குறிப்பிடத்தக்க அங்கீகாரம் உண்டு. பல நாடுகளில் பாலஸ்தீன தூ தரகங்கள் இயங்குகின்றன. ஒலிம்பிக் போன்ற சர்வதேச விளையாட்டுப் போட்டிகளிலும் பாலஸ்தீனம் சார்பில் வீரர்கள் கலந்து கொள்கிறார்கள். ஆனால், இஸ்ரேலுடனான மோதல் காரணமாக பாலஸ்தீனத்திற்கு முறையாக அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் இல்லை. தலைநகரம் இல்லை, ராணுவம் இல்லை.

1990களில் அமைதி ஒப்பந்தங்களுக்குப் பிறகு பாலஸ்தீன நிர்வாகம் உருவாக்கப்பட்ட போதிலும், வெஸ்ட் பேங்க் பகுதியை இஸ்ரேல் ராணுவம் தொடர்ந்து ஆக்கிரமித்து வருவதால் அதன் நிலப்பரப்புகளையும் மக்களையும் பாலஸ்தீன நிர்வாகத்தால் கட்டுப்படுத்த முடியவில்லை. பாலஸ்தீனத்தின் மற்றொரு பகுதியாகக் கருதப்படும், காசாவில் இஸ்ரேல் இப்போது மிக மோசமான ஒரு போரை நடத்தி வருகிறது.

பாலஸ்தீனத்தின் இந்த நிலை காரணமாக, அதனைத் தனி நாடாக அங்கீகரிப்பது என்பது பெரும்பாலும் ஒரு அடையாளப்பூர்வ நடவடிக்கையாகவே பார்க்கப்படுகிறது. பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக நிற்கிறோம் என்பதைக் காட்டும் ஒரு வலுவான தார்மீக மற்றும் அரசியல் நிலைப்பாடு தான் இது. ஆனால் களத்தில் இது பெரிய மாற்றங்களை ஏற்படுத்தாது. எனினும், இந்த அடையாள அங்கீகாரம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. மேலும் அவர்கள் சொந்த நாட்டை விட்டு அகதிகளாக வெளியேற்றப்பட்டு வருகின்றன. இதற்கு இஸ்ரேலின் போர் நடவடிக்கை தான் காரணம் என கூறப்படுகிறது.

இந்த போரில் காசா பகுதியில் வாழும் ஆயிரக்கணக்கான பாலஸ்தீன மக்கள் பெரும் துயரத்தை அனுபவித்து வருகின்றனர். தினசரி குண்டுவீச்சுகளால் நூ ற்றுக்கணக்கானோர் உயிரிழந்து வருகிறார்கள். பலர் தங்கள் வீடுகளை இழந்து, சொந்த நாட்டிலிருந்தே அகதிகளாக வெளியேற்றப்படுகின்றனர்.

மேலும், இஸ்ரேலின் திட்டமிட்ட வெளியேற்றத்திற்கு பின்னால் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்த நிலையில் பாலஸ்தீனத்தை தனி நாடாக இங்கிலாந்து அறிவித்துள்ளது. இதனால் பாலஸ்தீன மக்கள் மீதான அடுக்குமுறை முடிவுக்கும் வரும் என கூறப்படுகிறது

பாலஸ்தீன மக்கள் மீது நிகழ்ந்து வரும் இந்த தாக்குதல்களுக்கு காரணம் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகள் தான் என சர்வதேச சமூகங்கள் குற்றம் சாட்டுகின்றன. குறிப்பாக, இஸ்ரேல் திட்டமிட்ட முறையில் காசா மக்களை வெளியேற்றுகிறது என்ற குற்றச்சாட்டு வலுத்து வருகிறது. இந்த நடவடிக்கைகளுக்கு அமெரிக்காவின் அரசியல் ஆதரவும் இருப்பதாகவும் கூறப்படுகிறது. முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் பாலஸ்தீன பிரச்சினையை தன் அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தியதாகவும் பலர் தொடர்ந்து விமர்சிக்கின்றனர்.

இந்த சூழ்நிலையில், பாலஸ்தீன மக்களுக்கு சர்வதேச அளவில் ஓர் அங்கீகாரம் கிடைத்துள்ளது. இங்கிலாந்து, கனடா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் பாலஸ்தீனத்தை அதிகாரப்பூர்வமாக தனி நாடாக அங்கீகரித்துள்ளன.

இந்த அறிவிப்பு, பாலஸ்தீன மக்களுக்குப் பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில், பல தசாப்தங்களாக பாலஸ்தீன மக்கள் தனி நாடு என்ற உரிமைக்காக போராடி வருகின்றனர். இப்போது மூன்று முக்கிய நாடுகள் அங்கீகரித்திருப்பது, அவர்களின் சுதந்திரக் கனவிற்கு ஒரு முக்கிய படியாகக் கருதப்படுகிறது.

இங்கிலாந்தின் அறிவிப்பைத் தொடர்ந்து, ”பாலஸ்தீன மக்கள் மீது நடைபெறும் தாக்குதல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய நேரம் இது. அவர்களுக்கு உரிய உரிமையை வழங்குவது உலக சமுதாயத்தின் கடமை” என்று வெளிநாட்டு அலுவல்கள் துறை தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் அரசாங்கம் இந்த முடிவை கடுமையாக எதிர்க்கிறது. ”பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பது எங்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும். ஹமாஸ் போன்ற பயங்கரவாத அமைப்புகளுக்கு இது ஊக்கமளிக்கும்” என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது. எனினும், பாலஸ்தீன மக்களுக்கான சர்வதேச ஆதரவு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதன் மூலம், பாலஸ்தீன பிரச்சினைக்கு விரைவில் ஒரு தீர்வு கிடைக்கலாம் என்ற நம்பிக்கை பலரிடம் நிலவுகிறது.



முன்னர் பாலஸ்தீனம் என்று குறிப்பிடப்பட்ட பகுதியை 1922 முதல் 1948 வரை பிரிட்டன் ஆட்சி செய்தது. 1948ல் இஸ்ரேல் உருவான நிலையில், அதன் பிறகு பாலஸ்தீனப் பிரச்சனை நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. இஸ்ரேலுக்கு இணையாக ஒரு பாலஸ்தீன நாட்டை உருவாக்கும் முயற்சிகள் பல்வேறு காரணங்களால் தோல்வியடைந்தன.

இப்போது ஐ.நா. சபையில் உள்ள 193 உறுப்பு நாடுகளில் சுமார் 75மூ நாடுகள் தற்போது பாலஸ்தீனத்தை அங்கீகரித்துள்ளன. ஐ.நா. சபையிலும் பாலஸ்தீனம் ”நிரந்தர பார்வையாளர் நாடு” (நசஅயநெவெ ழடிளநசஎநச ளவயவந) என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளது. அதாவது ஐநா சபையில் நிகழ்வுகளில் பாலஸ்தீனம் கலந்து கொள்ளலாம்.

ஆனால், வாக்களிக்கும் உரிமை இல்லை என்பதே இதன் பொருளாகும்.

இப்போது இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் பாலஸ்தீனத்தை அங்கீகரித்துள்ள நிலையில், இதன் மூலம் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளில் நான்கு நாடுகளின் ஆதரவை பாலஸ்தீனம் பெறுகிறது. ஏற்கனவே 1988ல் ஆண்டு சீனா மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளுமே பாலஸ்தீனத்தை அங்கீகரித்தது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா இதுவரை பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்கவில்லை. கடந்த காலங்களில் பல அமெரிக்க அதிபர்கள் பாலஸ்தீன நாடு உருவாக ஆதரவு தெரிவித்தனர். இரட்டை நாடு உருவாக்கப்படுவதே ஒரு தீர்வாக இருக்கும் எனக் குறிப்பிட்டனர். ஆனால் தற்போதைய அதிபர் டிரம்ப் பாலஸ்தீனத்தைக் கடுமையாக எதிர்க்கிறார். இஸ்ரேலை முழுமையாக ஆதரிக்கிறார். மேலும், பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் நாடுகளையும் டிரம்ப் நிர்வாகம் கடுமையாக எச்சரிக்கிறது.

சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால் இப்போது இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகள் காசாவை அங்கீகரித்துள்ளது தார்மீக ரீதியாகவும் புவிசார் அரசியல் ரீதியாகவும் முக்கியமான ஒன்று. ஆனால், களத்தில் குறிப்பாகக் காசா மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதில் இது பெரிய மாற்றத்தைக் கொண்டு வராது.

இதற்கிடையில் இஸ்ரேலிய அரசும் அதன் அதிதீவிர வலதுசாரி சித்தாந்தம் கொண்ட அமைச்சர்கள் மற்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நிதான்யாகு ஆகியோர் போர் நிறுத்தம் ஒப்பந்தம் செய்து கொண்டால் தங்கள் இருப்புக்கு மிகப் பெரிய அளவில் ஆன பின்னடைவை ஏற்படுத்தும் என்பதை நன்கு உணர்ந்து கொண்ட காரணத்தால் தற்போது எல்லை மீறும் வகையில் தாக்குதலை நடத்தி வருகின்றனர் என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

இந்த போர் மனித உரிமைகள் மற்றும் அதன் உரிமை மீட்பு ஆகிய இரண்டு தரப்புக்கும் இடையே ஆன மாபெரும் நிகழ்வு என்பதில் சந்தேகமில்லை. அதேநேரத்தில் இந்த போர் நிறுத்தம் எதாவது வகையில் வரும் போது இஸ்ரேல் அரசும் அதன் மக்களும் உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட ஒரு சமூகம் ஆக நிச்சயமாக மாற போவதும் அதன் வரலாற்றில் நீண்ட கால துன்பத்தை அவர்கள் அடையப் போகிறார்கள் என்பது மட்டும் திண்ணம்.

பெஞ்சமின் நிதான்யாகு என்ற சர்வாதிகார ஆட்சி ஒட்டு மொத்த மனித சமூகத்தின் உரிமைகளைப் புறக்கணித்து பல இலட்சக்கணக்கான மக்களை படுகொலை மற்றும் நிரந்தர ஊனம் அடைய செய்ததன் விளைவு அவர்களை அடைய போகிறது மட்டும் தெளிவான உண்மையாகும்.

பாரம்பரியமாக வாழ்ந்து வந்த ஒரு நிலப்பரப்பின் தேசிய இனத்தை முற்றிலுமாக அழிக்க முயன்று பல்லாயிரக்கணக்கான அப்பாவி பொது மக்களை கொலை மற்றும் பட்டினியால் சாகடித்தார்கள் என்ற வரலாற்று இருட்டு பக்கங்களைக் தனதாக்கி கொண்ட யூத சமூகம் ஒரு போதும் எந்த நிலையிலும் வெற்றி பெற போவதில்லை என்பது மட்டும் திண்ணம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்பதை வரலாற்று பக்கங்கள் நாளை சாட்சியாக உலகிற்கு பறை சாற்றி கொண்டேயிருக்கும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

# 15 ஊடகவியலாளர்களுக்கு தலா 25.000 வீதம் வழங்கிய சிங்கப்பூர் ராயல் கிங் நிறுவன இயக்குநர் ஹாஜி சிராஜுதீன்




**(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)**

சிங்கப்பூர் ராயல் கிங்ஸ் நிறுவனத்தின் செயல் இயக்குநர் ஹாஜி சிராஜுதீன் தனது சொந்த நிதியில் இருந்து இலங்கை ஊடகவியலாளருக்கு தலா 25000 வீதம் 15 பேருக்கு அமைச்சர் டொக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ, பலஸ்தீன் தூதுவர் இஹாப் ஐ. எம். கலீல் ஆகியோர் வழங்கினார்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 30வது வருடாந்த பொதுக் கூட்டம் தபலாக கேட்போர் கூட அரங்கில் 27.09.2015 சனிக்கிழமை தலைவர் என். எம் அமீன் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் சுகாதார, மற்றும் ஊடக தொலைத்தொடர்பு அமைச்சர் டொக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ, இலங்கைக்கான பலஸ்தீன் தூதுவர் இஹாப் ஐ. எம். கலீல்,அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் ஹர்ஷ பண்டார ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொணடார்கள்.

விழாவில் 14 மூத்த ஊடகவியலாளர்களுக்கு பல்வேறு சாதனை புரிந்தமைக்கு பொன்னாடை மற்றும் நினைவு பரிசுகளை சுகாதார, மற்றும் ஊடக தொலைத்தொடர்பு அமைச்சர் டொக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ, சவுதி அரேபியாவின் இலங்கைக்கான தூதர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி, இலங்கைக்கான பலஸ்தீன் தூதுவர் இஹாப் ஐ. எம். கலீல், அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் ஹர்ஷ பண்டார ஆகியோர் வழங்கினார்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா மலர் குழு தாயாரித்த மீடியா போர மலர் வெளியீட்டு வைக்கப்பட்டது

சிங்கள மொழி மூலம் முஸ்லிம் மீடியா போரத்தின் வெளியிடான நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் சமுக வாழ்க்கை நூல் வெளியீட்டு வைக்கப்பட்டது. அததுடன் அதிதிகளுக்கும் வழங்கி வைக்கப்பட்டது

முன்னாள் அமைச்சர் ஏ.எச்.பௌசி, பலஸ்தீன் நாட்டின் புதிய தூ துவர், பாராளுமன்ற உறுப்பினர்கள் உதுமாலெப்பை பா.உ, காதர் மஸ்தான், தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம். இந்திய பிரநிதிகள் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில செயலாளர் ஆடுதுறை ஏ.எம். ஷாஜகான், மாநிலத் துணைச் செயலாளர்கள் இப்ராஹிம் மக்கி, எம்.ஜே.எம். ஜமால் முஹம்மது இப்ராஹிம், மேலப்பாளையம் அப்துல் ஜப்பார், நெல்லை மாவட்ட தலைவர் எல்.கே.எஸ். மீரான் முகைதீன், தெ- ன்காசி மாவட்ட செயலாளர் ஏ. சையது பட்டாணி, நெல்லை மண்டல ஒருங்கிணைப்புச் செயலாளர் எம். நயினார் முஹம்மது கடாபி, தூத்துக்குடி மாவட்ட அமைப்பாளர் எஸ்.கே. சாலிஹ், புத்தாநத்தம் ஜமாஅத் நிர்வாக குழு உறுப்பினர் மவ்லவீ சையது அபுதாஹிர் மிஸ்பாஹி, மூத்த ஊடகவியலாளர் திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது மற்றும் சிரேஸ்ட ஊடகவியலாளர்கள், மற்றும் அதிதிகளும் வழங்கப்பட்டது.

மாநாட்டில் சிங்கப்பூர் ராயல் கிங்ஸ் நிறுவனத்தின் செயல் இயக்குநர் ஹாஜி சிராஜுதீன் தனது சொந்த நிதியில் இருந்து தலா 25000 வீதம் நலிவடைந்த மூத்த ஊடகவியலாளர் 15 பேருக்கு சுகாதார, மற்றும் ஊடக தொலைத் தொடர்பு அமைச்சர் டொக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ, இலங்கைக்கான பலஸ்தீன் தூதுவர் இஹாப் ஐ. எம். கலீல், அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் ஹர்ஷ பண்டார, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாநில செயலாளர் ஆடுதுறை ஷாஜகான், மூத்த ஊடகவியலாளர் திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது ஆகியோர் வழங்கினார்கள்.

# கலைக்கமலின் இஸ்லாமிய கீத சிகரம் நிகழ்வும் கலைஞர்கள் கௌரவிப்பும்

**(ஏ.எஸ்.எம்.ஜாவித்)**

இசை முரசு நாகூர் ஹனீபா நூ ற்றாண்டு விழாவை முன்னிட்டு ஜனரஞ்சக பாடகர் கலைக்கமல் வழங்கிய இஸ்லாமிய கீத சிகரம் நிகழ்வும் 20 கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (28) கொழும்பு 07 இல் உள்ள ஜே.ஆர் ஜெயவர்த்தன மண்டபத்தில் தேசமாண்ய செல்லமுத்து ரவீந்திரன் தலைமையில் அக்கரைப்பற்று ஏ.பி. அப்துல் கையூம் முன்னிலையில் இடம்பெற்றது.

கலைக் கமலுடன் சிங்கப்பூர் பாடகர் பரீஹுல்லா, பாடகி மொரின் ஜெனட் மற்றும் உமாதேவி ஆகியோர் இணைந்து பாடி நிகழ்வை சிறப்பித்தனர்.

பிரதம அதிதியாக ஸைத்ஸாஜி மௌலானாவும் விசேட அதிதியாக தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவரும் கௌரவ அதிதியாக இப்திகார் அஹமட், கௌரவ அதிதிகளாக றமீஸ் , காயல் இளவரசு, மற்றும் இப்திகார் அஹமட் ஆகியோருடன் சிங்கப்பூர் புதிய நிலா ஆசிரியர் மு.ஜஹாங்கிர் உள்ளிட்ட நூற்றி- ற்கும் மேற்பட்ட கலை




ஆர்வளர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது 10 பாடலாசிரியர்கள் மற்றும் 10 பாடகர்களும் பொன்னாடை போர்த்தி சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கௌரவிக்கப்பட்டவர்கள் கவிஞரும் வைத்தியருமான தாசிம் அஹமட், கவிமணி நஜ்முல் ஹுஸைன், கவிஞர் சட்டத்தரணி ரசீத் எம் இம்தியாஸ், கவிஞர் யாழ் அசீம், கவிதாயினி நூறுல் அயின், கவிஞர் கல்கின்னை பௌமி ஹலீம்தீன், இளநெஞ்சன் முர்சிதீன், கவிஞர் எம்.எச்.எம்.நவ்சர், கவிஞர் பி.எம்.எம்.மௌஜூத், பாடக்களான நூர்ஜஹான் மர்சூக், உபைத் மஹ்தூம், முபாறக் இல்யாஸ், ஏ.எச்.எம்.பதுர்தீன், இளங்கோ ஜி சுதாகர், கவிதா இளங்கோ, ஜமால்தீன் முஸம்மில், மொஹிதீன் பஸ்ரி, ஸாமிலா நிசார் உள்ளிட்டோர் கௌரவிக்கப்பட்டனர்.

# இள வயது கர்ப்பிணிகள் அனுராதபுர மாவட்டத்தில் அதிகரிப்பு

**(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம் )**

அனுராதபுரம் மாவட்டத்தில் சிறுவயது கர்ப்பிணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அனுராதபுரம் மாவட்ட சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி குழுவினர் தெரிவித்தனர்.

கல்வி நடவடிக்கைகளுக்காக சிறுவர்கள் சிறுவயதில் இணையத்தைப் பயன்படுத்துவதன் மூலம் சிறுவயது கர்ப்பம் அதிகரித்துள்ளதாக குழுவினர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிறுவர்களிடையே கையடக்க தொலைபேசி பயன்பாட்டை ஒழுங்கு படுத்துதல் விசேட தேவைகள் உள்ளவர்களுக்கு கல்வியை மேம்படுத்துதல்



வேண்டும்.

யுனிசெப் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் மாவட்டத்தில் உள்ள ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கான ஊட்டச்சத்து திட்டத்தை ஆரம்பித்துள்ளதாகவும் குழுவினர் தெரிவித்தனர்.

# வாழைத் தோட்டம் அல் முனீராவில் பரிசளிப்பு விழா






**(ஏ.எஸ்.எம்.ஜாவித்)**

கொழும்பு 12 வாழைத்தோட்டம் அல் மஸ்ஜிதுல் முனீர் மஅல் மத்ரஸ ாவின் 20வது வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு 10 இல் உள்ள அல்-ஹிதாயா கல்லூரியின் எம்.சி.பஹர்டீன் மண்டபத்தில் மத்ரஸாவின் அதிபரும் ஆலோசகருமான மௌலவி எம்.எம்.எம்.ரயிசுதீன் (தீனி) தலைமையில் இடம்பெற்றது.

அல் மஸ்ஜிதுல் முனீர் மஅல் மத்ரஸ ாவின் தலைவர் ஜஹாங்கிர் அலி உள்ளிட்ட நிருவாக சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதிகளாக அல் மஸ்ஜிதுல் முனீர் மஅல் மத்ரஸாவின் போசகர்களான அல் ஹாஜ் பிறோஸ்டீன் மொஹமட், அல் ஹாஜ் எஸ்.எச்.ஏ.வஹாப் ஆகியோர் கலந்து கொண் டிருந்தனர்.

விஷேட பேச்சாளராக கொழும்பு 12 மதீனதுல் இல்ம் அறபிக் கல்லூ ரியின் அதிபர் அஷ்ஷெய்க் எம்.எப். அப்துல் அஸீஸ் (கில்றி,மஸாஹிரி) உட்பட பல விஷேட அதிகள், பெற்றோர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து சிறப் பித்தனர்.

இதன்போது மாணவர்களின் இஸ்லாமிய ஹஸீதா, இஸ்லாமிய கீதங்கள், மூன்று மொழிகளிலுமான மாணவர்களின் பேச்சுக்கள் உள்ளிட்ட நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன் மத்ரஸாவினால் நடாத்தப்பட்ட இஸ்லாமிய போட்டி நிகழ்வுகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்கள், சான்றிதழ்கள் மற்றும் நினைவுப் பரிசுகள் என்பன வழங்கப்பட்டதுடன் அதிதிகள் கௌரவிக்கப்பட்டதுடன் மத்ரஸா அதிபர் ஆசிரியர்களுக்கு நினைவுப் பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.




அரபாத் பஹுர்தீன்

## 3ஆவது மகளிர் ஒருநாள் உலகக் கிண்ணம்

# முதல் ஆட்டத்தில் இந்தியாவிடம் வீழ்ந்தது இலங்கை

மகளிர் ஒருநாள் உலகக் கிண்ண தொடரில் இந்திய அணிக்கு எதிரான முதல் சுற்று லீக் போட்டியில் சமரி அத்தபத்து தலைமையிலான இலங்கை அணி டக்வேர்த் லூயிஸ் அடிப்படையில் 59 ஓட்டங்களால் தோற்றுப் போனது.

13ஆவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ண தொடர் இந்திய மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் இடம்பெற்று வருகின்றது. இதில் தரவரிசைப் பட்டியலில் முதல் 8 இடங்களில் உள்ள அணிகள் பங்கேற்கின்றன. அதற்கமைய முதல் லீக் சுற்று ஆட்டத்தில் ஒரு அணி மற்றைய 7 அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். அதில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுக்குத் தகுதி பெற்று இறுதிப் போட்டி இடம்பெறும் வண்ணம் போட்டி அட்டவணை அமைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய தொடரின் முதல் போட்டி அஸ்ஸாம் கிரிக்கெட் மைதானத்தில் நேற்று (30) இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கிடையில் பகளிரவுப் போட்டியாக இடம்பெற்றது. இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

அதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சற்று தடுமாற்றமிக்க ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இதற்கிடையில் போட்டியை மழை பாதிக்க ஆட்டம் 47 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்டது. இதனால் இந்திய அணி 47 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் அமன்ஜட் 57 ஓட்டங்களையும், தீப்தி 53 ஓட்டங்களையும் அதிகபட்ச பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் ரணவீர 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பின்னர் இந்திய மகளிர் அணியால் நிர்ணயிக்கப்பட்ட 270 ஓட்டங்கள் என்ற சவால்மிக்க வெற்றி இலக்கினை நோக்கி பதிலளித்த இலங்கை மகளிர் அணியால் 45.4 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 211 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொள்ள முடிந்தது. எனவே இப் போட்டியின் இந்திய அணி டக்வேர்த் லூயிஸ் அடிப்படையில் 59 ஓட்டங்களால் வெற்றி பெற்று புள்ளிக்கணக்கை ஆரம்பித்திருந்தது.

இலங்கை மகளிர் அணி சார்பில் துடுப்பாட்டத்தில் சமரி அத்தபத்து 43 ஓட்டங்களையும், டி சில்வா 35 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தீப்தி 3 விக்கெட்டுகளை சாய்த்துடன் போட்டியின் ஆட்டநாயகி விருதையும் தனதாக்கினார்.

## சூர்யகுமார் யாதவ் கெமராவுக்கு முன் நடிக்கிறார்

## பாகிஸ்தான் அணித்தலைவர் சல்மான் சாடல்




இந்திய அணியின் அணுகுமுறை குறித்து பாகிஸ்தான் அணி தலைவர் சல்மான் ஆகா கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

இந்தத் தொடரில் இந்திய அணி நடந்துகொண்ட விதம் ஏமாற்றம் அளிப்பதாக அவர் கூறியுள்ளார்.

“இந்திய அணியினர் கைகுலுக்க மறுத்தது எங்களுக்கு அவமரியாதை இல்லை.” என கூறிய அவர் அது கிரிக்கெட்டுக்கு அவர்கள் நிகழ்த்திய அவமரியாதை என்றும் தெரிவித்துள்ளார்.

தொடர் தொடங்குவதற்கு முன்பாக தனிப்பட்ட முறையில் தன்னுடன் சூர்யகுமார் யாதவ் கைகுலுக்கியதாகவும் கேமராவுக்கு முன்பு கைகுலுக்க மறுத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். வெளியில் இருந்து வந்த உத்தரவின்படி அவர் அவ்வாறு நடந்துகொண்டதாகவும் சல்மான் ஆகா தெரிவித்துள்ளார்.


இந்தியாவிலோ அல்லது பாகிஸ்தானிலோ ஒரு குழந்தை இதைப் பார்த்தால், நாம் அவர்களுக்கு ஒரு நல்ல செய்தியை அனுப்பவில்லை என சுட்டிக்காட்டிய அவர் மக்கள் தங்களை முன்மாதிரியாக நினைக்கிறார்கள் என்றும் கூறியுள்ளார்.

ஆசிய கிரிக்கெட் சபை தலைவரிடமிருந்தே கிண்ணத்தை வாங்குவது முறை எனவும் அதை அவரிடமிருந்து வாங்காமல், வேறு எப்படி பெற்றுக்கொள்வீர்கள் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## கஹட்டோவிட்ட கால்பந்து ப்ரீமியர் லீக் போட்டிகள்:

## சாம்பியன் கிண்ணத்தை வென்ற மௌலானாபுர மவுண்டன்ஸ்




(ரிஹ்மி ஹக்கீம்)

08வது கஹட்டோவிட்ட கால்பந்து ப்ரீமியர் லீக் (2025) போட்டிகள் KPL கால்பந்து கமிட்டியின் ஏற்பாட்டில் கடந்த 20 மற்றும் 21 ஆகிய தினங்களில் கஹட்டோவிட்ட பொது மைதானத்தில் இடம்பெற்றது.

35 வயதின் கீழ் மற்றும் 35 வயதுக்கு மேல் என இரு பிரிவுகளாக இடம்பெற்ற இப்போட்டிகளில் 35 வயதுக்கு மேற்பட்டோருக்கான இறுதிப்போட்டியில் ஸஹ்ரான் தலைமையிலான மாஸ்டர்ஸ் அணி 1 – 0 என்ற கோல் அடிப்படையில் சப்ராஸ் தலைமையிலான சீனியர்ஸ் அணியை வீழ்த்தி சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

மேலும், 35 வயதுக்கு உட்பட்டோருக்கான இறுதிப்போட்டியில் மௌலானாபுர மவுன்டன்ஸ் அணி தொடர்ந்தும் மூன்றாவது முறையாக சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டமை விஷேட அம்சமாகும்.

இறுதிப்போட்டியில் இம்முறை பைசல் தலைமையிலான மௌலானாபுர மவுன்டன்ஸ் அணியினர் 1 – 0 என்ற கோல் அடிப்படையில் நப்ராஸ் தலைமையிலான கமத்த கிங்ஸ் அணியை வீழ்த்தி சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர்.



35 வயதுக்கு மேற்பட்டோருக்கான இறுதிப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக மாஸ்டர்ஸ் அணியின் பைசர், 35 வயதின் கீழ் பிரிவில் இறுதிப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக மௌலானாபுர மவுன்டன்ஸ் அணியின் சதான் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

சிறந்த கோல் காப்பாளர்களாக மாஸ்டர்ஸ் அணியின் ரிஸ்மி மற்றும் மௌலானாபுர மவுன்டன்ஸ் அணியின் ஹம்ஸா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அதிக கோல்களை அடித்தவர்களுக்கான விருதுகளை மாஸ்டர்ஸ் அணியின் சரபான் மற்றும் மௌலானாபுர மவுன்டன்ஸ் அணியின் ரிஸ்கி ஆகியோர் தமதாக்கிக் கொண்டனர்.

தொடரின் சிறப்பாட்டக்காரர் விருதை கமத்த கிங்ஸ் அணியின் அகீல் சுவீகரித்துக் கொண்டார்.

மேலும் மேல் மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்ட தொடரில் இரண்டாம் இடம் பெற்று தேசிய மட்ட போட்டிகளுக்கு தகுதி பெற்ற கஹட்டோவிட்ட அல் பத்ரியா மகா வித்தியாலய பாடசாலை அணியினரும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

போட்டிகளுக்கு LOLC Al Falah மற்றும் Ridha Motors பிரதான அனுசரணை வழங்கினர்.

இறுதிப்போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்வுகளுக்கு பிரதம அதிதியாக அத்தனகல்ல பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி இந்திக்க சன்ஜீவ கலந்து சிறப்பித்தார்.

## மே.இ. தீவுகளுக்கு எதிரான ரி20 தொடரை வெற்றி கொண்டு வரலாறு படைத்தது நேபாளம்




மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரின் 3ஆவதும் இறுதியுமான போட்டியில் 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் நேபாளம் அணி தோல்வியுற்ற போதிலும் முதல் இரு போட்டிகளில் பெற்ற அசத்தல் வெற்றியுடன் தொடரை 2:1 என முதல் தடவையாக டெஸ்ட் அந்தஸ்து பெற்ற அணியை வெற்றி கொண்டு வரலாறு படைத்தது.

மேற்கிந்தியத் தீவுகள் அணியும் நேபாளம் அணியும் ஜக்கிய அரபு இராச்சியத்தில் 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் மோதியிருந்தன. இதில் கடந்த 27ஆம் திகதி இடம்பெற்ற முதல் ரி20 போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை 19 ஓட்டங்களால் வீழ்த்தி அவ் அணிக்கு எதிராக முதல் வரலாற்று வெற்றியை பதிவு செய்து தொடரில் 1:0 என முன்னிலை பெற்றது.

பின்னர் 29ஆம் திகதி இடம்பெற்ற 2ஆவது போட்டியில் 173 ஓட்டங்களை நேபாளம் அணி பெற்றுக் கொண்டதுடன் மேற்கிந்தியத் தீவுகள் அணியை வெறும் 83 ஓட்டங்களுகுள் சுருட்டி 90 ஓட்டங்களால் அசத்தல் வெற்றியை பெற்றதுடன் ஒரு போட்டி மீதமிருக்க டெஸ்ட் அந்தஸ்து பெற்ற ஒரு அணிக்கு எதிராக முதல் முறையாக தொடரை 2:0 என கைப்பற்றியது.

இந்தநிலையில் தொடரின் 3ஆவதும் இறுதியுமான போட்டி நேற்று இடம்பெற்றிருக்க அதில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 10 விக்கெட்டுக்களால் வெற்றி கொண்ட போதிலும் 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடர் 2:1 என நேபாளம் அணி வசமானது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media (PVT) Ltd. நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியிலிருந்து வெளிவருகின்றது.